# 3. வேளாண்மை, மீன்பிடித் தொழில் மற்றும் காடாக்கல்

## 3.1 உற்பத்திப் போக்குகள்

1999இல் 4.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த வேளாண்மை வெளியீடு, 2000ஆம் ஆண்டில் 1.8 சதவீதத்தால் மேலும் விரிவடைந்து, தேயிலை மற்றும் தெங்கு வெளியீட்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பெருமளவில் பிரதிபலித்தது. எனினும் நெல் மற்றும் இறப்பர் என்பவற்றினதும் ஏனைய சில களப் பயிர்களின் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சி காரணமாக வளர்ச்சி வீதம் குறைவாகவே காணப்பட்டது.

தேயிலை உற்பத்தியானது 1999இல் காணப்பட்ட முன்னெப்போதுமில்லாதவாறான 300 மில்லியன் கிலோக்கிறாம் வெளியீட்டின் பின் 8 சதவீதத்தால் மேலும் அதிகரித்து, முதல் முறையாக 306 மில்லியன் கிலோக்கிறாம்கள் கொண்ட புதிய உச்ச வெளியீட்டு மட்டத்தையடைந்தது. தெங்கு வெளியீடு, 8 சதவீதத்தால் அதிகரித்து 3,055 மில்லியன் காய்களாக விளங்கி முன்னெப்போதுமில்லாதவாறான ஆகக் கூடிய உற்பத்தி மட்டத்தைப் பதிவு செய்திருந்தது. 1999இல் சாதகமான வானிலையின் காலந்தாழ்த்திய தாக்கம் மற்றும் 2000ஆம் ஆண்டில் நன்றாகப் பரந்தளவில் பெய்த மழை ஆகியன, 1999இல் வளமாக்கிகள் அதிகளவில் பயன்படுத்தப் பட்டமையுடன் இணைந்து தெங்கு வெளியீட்டின் அதிகரிப்பிற்குச் சாதகமான அளவில் பங்களித்தன. கடந்த ஆண்டுகளில் வீழ்ச்சியடையும் போக்கினைக் காட்டிய இறப்பர் வெளியீடு, மேலும் வீழ்ச்சியடைந்து முன்னெப்போதும் பதியப்படாத ஆகக்குறைந்த வெளியீட்டை அறிவித்திருந்தது. 1999இல் உச்சவெளியீட்டை அடைந்திருந்த நெல்உற்பத்தியானது சிறுபோக அறுவடை, 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் குறைப்பொன்று காணப்பட்டபோதிலும் நெல்லின் சராசரி விளைச்சல் முன்னேற்றமடைந்துள்ளதுடன், முன்னெப்போதும் அடையப்படாத ஆகக்கூடிய மட்டத்தையடைந்து மிருந்தது. ஏனைய களப்பயிர்களுள் உருளைக்கிழங்கு உற்பத்தி 78 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு, இறக்குமதிகள் மீது கூடிய தீர்வை விதிக்கப்பட்டமையினால், உருளைக்கிழங்குச் செய்கைக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பே காரணமாகும். செத்தல் மிளகாய்,பெரிய வெங்காயம், உழுந்து, சோளம் மற்றும் பாசிப்பயறு போன்ற பெரும்பாலான ஏனைய களப்பயிர்களின் வெளியீடு, முன்னைய ஆண்டினதை விடக் குறைவாகக் காணப்பட்டது. சீனி உற்பத்தியும் வீழ்ச்சியடைந்த வேளையில், பால் மற்றும் முட்டை உற்பத்தி முன்னைய ஆண்டுடனொப்பிடுகையில் அதிகரித்திருந்தது.

**அட்டவணை 3.1**
**முக்கிய வேளாண்மை விடயங்களின் உற்பத்தியும் விலை மாற்றங்களும்**

| விடயம் | அலகு | உற்பத்தி | | 1999/2000இல் மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | 1999 | 2000 | உற்பத்தி | விலை |
| தேயிலை | மில்.கி.கி. | 284 | 306 | 7.7 | 17.7 |
| இறப்பர்• | மில்.கி.கி. | 97 | 87 | -9.9 | 21.1 |
| தெங்கு | மில்.காய்கள் | 2,828 | 3,055 | 8.0 | -31.1 |
| நெல் | '000மெ.தொ. | 2,868 | 2,860 | -0.3 | -8.8 |
| சீனி | '000மெ.தொ. | 66 | 64 | -3.0 | -7.5 |
| மீன் | '000மெ.தொ. | 307 | 323 | 5.0 | 11.2 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
தொடர்பான அதிகார சபைகள்.

## 3.2 வேளாண்மைக் கொள்கை

அரசின் வேளாண்மைக் கொள்கை, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் தனியார் துறையின் அதிகளவிலான பங்களிப்பை அனுமதிப்பதைச் சுற்றியே அமைந்திருந்த வேளையில் அரசு இத்துறையின் அபிவிருத்தியில் அனுசரணையாளராகத் தொழிற்பட்டது.

1995இல் ஆரம்பிக்கப்பட்ட பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் தனியார் மயமாக்கல், 2000ஆம் ஆண்டில் உறுதியாக முன்னேற்றமடைந்து. உரிமை மாற்றல் திட்டத்தின்கீழ் 51 சதவீதமான பங்குகள் முகாமைக் கம்பனிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட வேளையில் ஒவ்வொரு கம்பனியினதும் பங்குகளில் 10 சதவீதம் ஊழியர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. எஞ்சிய இருப்பில் 20 சதவீதமானவை ஆரம்பப் பொது வழங்கலாக வழங்கப்பட இருந்ததுடன் மிகுதியாகவுள்ள 19 சதவீதம் பங்குச் சந்தையினூடாக விற்பனை செய்யப்படவிருந்தது. 2000ஆம் ஆண்டினிறுதியில் எட்டுக் கம்பனிகளைத் தனியார் மயமாக்கல் முற்றுப் பெற்றதுடன் அனைத்துப் பங்குகளும் முற்றாக விற்பனை செய்யப்பட்டுமிருந்தன. வேறு 8 கம்பனிகளின் பங்குகளில் 19 சதவீதமானவை இன்னும் அரசிடமே இருக்கும் வேளையில்,4 கம்பனிகளில் அவற்றின் 39 சதவீதமான பங்குகள் அரசிடம் காணப்படுகிறது.

இவ்வாண்டில், வரையறுக்கப்பட்ட மல்வத்தை வெளிப் பெருந்தோட்டம் தனது பங்குகளில் 20 சதவீதத்தை ஆரம்பப் பொது வழங்கலினூடாக விற்பனை செய்ததுடன் அரசின் பங்கினை மேலும் குறைத்தது. சந்தை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு எஞ்சிய பங்குகள், எதிர்காலத்தில் பங்குச் சந்தையினூடாக விற்பனை செய்யப்படும். தேயிலையின் விலைகள் தற்போது சிறந்தவையாகக் காணப்படுகின்றமையினால், இத்துறையில் நீண்ட கால முதலீடுகளுக்காக சுயமாக உருவாக்கப்பட்ட மூலதன அபிவிருத்தி நிதியமொன்றை நிறுவுவது தொடர்பாக பெருந்தோட்டக் கம்பனிகள்

தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. இத்தகைய முதலீடானது விலைகள் கீழ்நோக்கிய போக்கில் காணப்படும்போது கம்பனிகள் அதனைச் சமாளிக்கக்கூடிய தன்மையைக் கொண்டதாயிருக்கும்.

உள்நாட்டு வேளாண்மைத்துறையில் உற்பத்தியாக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் வெளியீட்டை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களுடன் மேலதிக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாக ஆறு விடயங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. ஆராய்ச்சி, உற்பத்தி ஊக்குவிப்பும் விரிவாக்கமும், விதைகள் மற்றும் பயிர்ச் செய்கைப் பொருட்களின் வழங்கல், வர்த்தக வேளாண்மையில் தனியார்துறைப் பங்கேற்பு மற்றும் சந்தைப்படுத்தலும், நிறுவன ரீதியான சீராக்கங்களும் ஆகியனவே அடையாளங்காணப்பட்ட விடயங்களாகும்.

வேளாண்மை ஆராய்ச்சியானது வேளாண்மையாளர்களினால் எதிர் நோக்கப்படும் நடைமுறைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக கேள்வியினால் உந்தப்படும் ஆராய்ச்சி வசதியின் வடிவில் மீளமைக்கப்படும். வேளாண்மை ஆராய்ச்சிக்கான முன்னுரிமை விடயங்கள் அடையாளங் காணப்பட்டு ஆராய்ச்சி நிதியிடலை உச்ச அளவில் பயன்படுத்துவதற்காக வேளாண்மை ஆராய்ச்சிக்கும் நோக்கத்துக்குமான சபையினூடாக இணைக்கப்படும்.

1996இல் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய விதைக் கொள்கையைத் தொடர்ந்து விதைகள் மற்றும் பயிர்ச் செய்கைப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தலில் தனியார் துறையின் பங்கேற்பு இவ்வாண்டில் மேலும் வலுப்படுத்தப்பட்டது. 1998இல் தனியார் மயப்படுத்தப்பட்ட ஹிங்குராகொடை விதைப் பண்ணையின் முன்னேற்றத்தினால் உந்தப்பட்டு, அரசுடமையான பெல்வெகெர பண்ணையின் பெரும்பகுதி தனியார்துறைக்கு குத்தகைக்கு விடப்பட்டது. இக்குத்தகையுடன் பண்ணையின் அசையும் சொத்துக்களும் விற்பனை செய்யப்பட்டன. அதே வேளையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதைகள் மற்றும் பயிர்ச்செய்கைப் பொருட்களின் தரத்தை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக விதை சான்றுபடுத்தும் பணிக்கான சட்டரீதியான அதிகார சபைக்கு அதிகாரத்தை வழங்குவதற்கு விதைச் சட்டமொன்றை இயற்றுவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

பயிர்த் தொற்று நோய்த் தடுப்புச்சட்டம் தாராளமயமாக்கப்பட்ட கொள்கைச் சூழலுக்குப் பொருந்தக்கூடிய வகையில் திருத்தியமைக்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டுமிருப்பதுடன் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுமுள்ளது. காணியைச் சொந்தமாகக் கொண்ட வேளாண்மையாளர்களின் வகுப்புப் பிரிவொன்றினை உருவாக்குவதற்காக காணியுரிமையை ஒழுங்கு முறைப்படுத்தவும், அடிமட்டத்திலுள்ள அமைப்புக்களுக்குக் கூடிய அதிகாரத்தையும் உரிமையையும் வழங்குவதற்குமென கமநலச் சேவைகள் சட்டமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை உற்பத்திப் பொருட்களினதும் அவற்றினது விலைகளினதும் குறுகியகால தளம்பல்களை ஆகக் குறைந்ததாக்குகின்ற வேளையில் நீண்டகாலத்தில் உள்நாட்டு வேளாண்மை வெளியீட்டில் தக்கவைத்துக் கொள்ளக்கூடிய அதி உயர் வளர்ச்சி வீதத்தினை உறுதி செய்து கொள்ளுவதற்காக வேண்டி வேளாண்மைத் துறையில் நிலையான தீர்வைக் கொள்கையொன்றினை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. விவசாயிகளை அல்லது நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக வேண்டி நடைமுறைப்படுத்தபட்ட அவ்வப்போதைய தீர்வை மாற்றங்கள் நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கக் கூடிய பாதகமான விளைவுகளை உருவாக்கியுள்ளன. உதாரணமாக அரிசி இறக்குமதிகளின் மீதான தீர்வைகள் 1999 ஒத்தோபர் 23ஆம் நாளிலிருந்து திசெம்பர் 31ஆம் நாள்வரை 35 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு குறைக்கப் பட்டமையானது பெரும் தொகுதி அரிசியின் இறக்குமதிக்கும் 2000ஆம் ஆண்டு பெரும்போக அறுவடையின் பின்னர் நெல் விலைகளின் கணிசமான வீழ்ச்சிக்கும் இட்டுச் சென்றது. விலை நிருணயத்தின் ஊடாக சந்தையில் தலையிடுவதற்கு இது அரசாங்கத்தினை நிர்ப்பந்தித்தது. இதன்படி, கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கிலோக்கிறாம் ஒன்று ஆகக் குறைந்தது ரூ.13 வீதத்தில் நெற் கொள்வனவினை மேற்கொள்ளும்படி அரசாங்கம் பணித்தது. இந்த நோக்கத்துக்காக திறைசேரியின் உத்தரவாதத்துடன் அரச வங்கிகள் இரண்டினதும் ஊடாக இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் சலுகை அடிப்படையிலான கடன்கள் வழங்கப்பட்டன. கடன் வழங்கப்பட்ட நேரத்தில் வட்டிவீதம் 14 சதவீதத்தில் நிலைப்படுத்தப்பட்டதோடு வட்டியைச் செலுத்துவதற்கு திறைசேரி இணக்கம் தெரிவித்தது. இந்தத் தலையீடானது நெல்லின் மோசமடைந்து செல்லும் விலையினைக் கட்டுப்படுத்துவதற்கு ஓரளவு உதவியபோதும் ஒப்பந்த விலை கிலோக்கிறாம் ஒன்று ரூ. 12இல் நிலைப்படுத்தப்பட்டிருந்த "கொவி சகனய" திட்டத்தின் கீழ் விவசாயிகள் ஒப்பந்தம் செய்திருந்த முன்னோக்கிய ஒப்பந்தங்கள் சிலவற்றை இது இடருக்கு உட்படுத்தியது. இந்தத் தலையீடு போதுமானதாகக் காணப் படாமையினால் அரிசி இறக்குமதியினைக் கட்டுப்படுத்த நேரிட்டது. எனவே 2000ஆம் ஆண்டு யூலை 17ஆம் நாளிலிருந்து அரிசி இறக்குமதிகள் உரிமத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. கூட்டுறவு மொத்த விற்பனை

நிலையம் இன்னமும் பாரிய நெற்கையிருப்புக்களைக் கொண்டுள்ளதோடு தொடர்ந்து இழப்புக்களை ஏற்படுத்துகின்றது.

இவ்வாண்டில், உணவுக்குப் பயன்படுத்தக்கூடிய எண்ணெய் மீதான தீர்வை வீதங்களை அரசு அதிகரித்ததுடன், இதன் விளைவாக தேங்காயெண்ணெய்க் கைத்தொழிலைப் பாதுகாக்கும் நோக்குடன் மிகைக் கட்டணம் ஒன்றும் விதிக்கப்பட்டது. இது , தெங்கு உற்பத்தியில் காணப்பட்ட குறைப்பைத் தொடர்ந்து தேங்காய்த் துருவல் தயாரிப்பாளர்கள் குறைந்த விலையில் காய்களைக் கொள்வனவு செய்வதை இலகுவாக்குவதற்காக 1996இல் வழங்கப்பட்ட தீர்வைக் குறைப்புக்கு மாறானதாகும்.

குறைந்த செலவுடனான இறக்குமதிகளுடன் போட்டி போடுவதில் கஷ்டங்களை எதிர்நோக்கும் உருளைக் கிழங்கு விவசாயிகளின் கடுமையான எதிர்ப்பினால் உருளைக்கிழங்கு மீது ஏற்கனவே நடைமுறையிலுள்ள 35 சதவீதத் தீர்வை வீதத்துக்கு மேலதிகமாக 35 சதவீத மிகைக் கட்டணமொன்றை அரசு விதித்தது. இதன் விளைவாக 2000ஆம் ஆண்டு திசெம்பரில் இத் தீர்வையானது கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.20 கொண்ட தனியான குறித்துரைக்கப்பட்ட தீர்வையொன்றாக மாற்றப்பட்டது. இவ்வாறானஅதி கூடிய பாதுகாப்பின் விளைவாக உருளைக்கிழங்கின் நாடு முழுவதிற்குமான சராசரி சில்லறை விலையும் 23 சதவீதத்தால் அதிகரித்து 2000ஆம் ஆண்டில் உயர்வாகக் காணப்பட்டமையினால் உள்நாட்டு உருளைக்கிழங்கின் உற்பத்தியானது நுகர்வோரின் செலவில் 78 சதவீதத்தால் அதிகரித்தது.

### 3.3 ஏற்றுமதிப்பயிர்கள்

### தேயிலை

2000ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தியானது, 1999இன் உச்ச உற்பத்தியைவிட 8 சதவீதத்தால் அதிகரித்து, 1993 இலிருந்து காணப்பட்டு வந்த மேல் நோக்கிய போக்கினைத் தொடர்ச்சியாகக் கொண்டு விளங்கி, முதல் முறையாக 300 மில்லியன் கிலோக்கிறாமை விஞ்சிய அளவில் 306 மில்லியன் கிலோக் கிறாம்கள் கொண்ட ஆகக் கூடிய மட்டத்தையடைந்தது. சாதகமான தேயிலை விலைகள், அதிகரித்த வளமாக்கிப் பிரயோகம் மற்றும் சாதகமான வானிலை ஆகியனவே உற்பத்தியின் இவ்வதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாகும். உற்பத்தியில் காணப்பட்ட ஆகக் கூடிய இச் செயலாற்றமானது தாழ்நிலப் பகுதியின் செயலாற்றத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றில் பிரதிபலிக்கப்பட்டதுடன் மொத்த உற்பத்தியின் 54 சதவீதத்துக்கு இதனது வெளியீடு வகைகூறி, 2000ஆம் ஆண்டில் 12 சதவீதத்தால் அதிகரித்து 166 மில்லியன் கிலோக்கிறாம்களாக விளங்கியது. உயர்நில மற்றும் மத்தியநில பகுதிகளின் உற்பத்தி முறையே 27 சதவீத மற்றும் 18 சதவீதப் பங்குகளுடன் 2000ஆம் ஆண்டில் முறையே 3 சதவீதத்தாலும் 5 சதவீதத்தாலும் அதிகரித்துக் காணப்பட்டது.

மொத்த வெளியீட்டின் 60 சதவீதத்துக்கு வகைகூறும் சிறு உடைமையாளர் துறை, தனது செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் அடைந்ததுடன் 2000ஆம் ஆண்டில் 12 சதவீத அதகரிப்பைப் பதிவு செய்து 184 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கியது. வெளியீட்டில் எஞ்சிய பகுதிக்கு வகைகூறிய பெருந்தோட்டக் கம்பனிகள் 2 சதவீத வளர்ச்சியை மட்டும் பதிவு செய்திருந்தன. சிறு உடைமையாளர்துறையின் விளைச்சல், முன்னைய ஆண்டைவிட 2 சதவீதத்தால் அதிகரித்து, 2000ஆம் ஆண்டில் எக்டேயரொன்றிற்கு 2,216 கிலோக்கிறாம் கொண்ட புதிய ஆகக் கூடிய மட்டமொன்றையடைந்தது. தேயிலையின் சராசரி தேசிய விளைச்சல் எக்டேயரொன்றிற்கு 1,618 கிலோக்கிறாம்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. தோட்டத்துறையில் விளைச்சல் மட்டம் 6 சதவீதத்தால் அதிகரித்து எக்டேயரொன்றிற்கு

**அட்டவணை 3.2**
**தேயிலைத் துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1998 | 1999(அ) | 2000(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம் | 280 | 284 | 306 |
| உயர் நிலம் | மில்.கி.கிறாம் | 76 | 81 | 84 |
| மத்திய நிலம் | மில்.கி.கிறாம | 54 | 54 | 56 |
| தாழ் நிலம் | மில்.கி.கிறாம் | 150 | 149 | 166 |
| 2. விளைச்சல்கள் (இ) | | | | |
| மொத்த விளைச்சல் | '000எக்டேயர் | 195 | 180 | 180 |
| நாட்டப்பட்டநிலப்பரப்பு | '000எக்டேயர் | 180 | 173 | 173 |
| 3. வளமாக்கிப் பாவனை | '000மெ.தொன் | 182 | 166 | 198 |
| 4. மீள் நடுகை | எக்டேயர் | 1,234 | 1,376 | 1,085 |
| 5. புதிய பயிரிடுகை | எக்டேயர் | 400 | 415 | 263 |
| 6. விலைகள் | | | | |
| கொழும்பு(தேறிய) | ரூபா/கி.கி. | 134.35 | 115.19 | 135.53 |
| ஏற்றுமதிகள்(க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 184.94 | 162.39 | 184.37 |
| 7. உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி. | 100.71 | 101.29 | 109.99 |
| 8. ஏற்றுமதிகள் | ரூ.மில்.கி.கி. | 272 | 269 | 288 |
| 9. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 50,280 | 43,728 | 53,133 |
| | அ.டொ.மில். | 780 | 621 | 700 |
| 10. மொத்த உள்நாட்டு உற்பத்தியின்சதவீதமாகக் கூட்டப்பட்டபெறுமதி (உ) | | 2.7 | 2.2 | 2.6 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.


(ஆ) தற்காலிகமானவை)

(இ) தேயிலை ஆணையாளர் பிரிவினால் 1994/95 இல் மேற்கொள்ளப்பட்ட அளவையின் அடிப்படையில் அமைந்தவை. 1999இல் நடாத்தப்பட்ட பெருந்தோட்ட அளவீட்டின் அடிப்படையில் 1999இன் பின்னரான பரப்பளவு திருத்தியமைக்கப்பட்டது. (கைவிடப்பட்ட தேயிலை நிலங்கள் உள்ளடங்காது)

(ஈ) கொழுந்துத் தேயிலையை வழங்குபவர்களின் இலாப அளவையும் உள்ளடக்குகின்றது.

(உ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

வரைபடம் 3.1
விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - தேயிலை
(1990 = 100)




1,151 கிலோக் கிறாம்களாக விளங்குமென மதிப்பிடப்பட்டமை முக்கியமாக தனியார் மயப்படுத்தப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் தோட்டங்களில் காணப்பட்ட திருந்திய முகாமையின் விளைவேயாகும். எனினும் சிறு உடைமையாளர்களின் இனப்பெருக்க அடிப்படையிலானதும் கூடிய விளைச்சல் தரக்கூடியதுமான தேயிலையுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டத்துறையிலுள்ள தேயிலை பயிரிடப்படும் பரந்த நிலப்பரப்பு குறைந்த விளைச்சல் தரும் தேயிலையின் கீழுள்ளமையினால் பெருந் தோட்டத்துறையின் சராசரி விளைச்சலானது சிறு உடைமையாளர்துறையின் விளைச்சலிலும் பார்க்க மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

வெட்டிக் கிழித்து சுருட்டப்பட்ட தேயிலையின் உற்பத்தி 2000ஆம் ஆண்டில் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 17.5 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கியது. உள்நாட்டு சீ.ரீ.சீ. தேயிலை உற்பத்திச் செலவிலேற்பட்ட அதிகரிப்புக் காரணமாக உலகளாவிய சீ.ரீ.சீ தேயிலைச் சந்தையில் குறைந்த விலைப் போட்டியாளர்களுடன் போட்டிபோட முடியாதுள்ளது. இதன் விளைவாக, கலவை செய்தல் மற்றும் மீள ஏற்றுமதி செய்தலுக்கான சீ.ரீ.சீ தேயிலை இறக்குமதிகள் 2000ஆம் ஆண்டில் 2.8 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கி 1999இலிருந்து 67 சதவித அதிகரிப்பைக் கொண்டிருந்தன. எனினும் கலவை செய்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு, உள்நாட்டுத் தேயிலை உற்பத்தியின் 1 சதவீதத்துக்கும் குறைவாகக் காணப்பட்டது.

கொழும்பு ஏலங்களில் ஆண்டுச் சராசரி விலை, 1999 யூலையில் ஆரம்பிக்கப்பட்ட போக்கினைத் தொடரும் வகையில் 2000ஆம் ஆண்டில் 18 சதவீதத்தால் அதிகரித்து, கிலோகிறாமொன்றுக்கு ரூ.135.53 ஆக விளங்கியது. விலை அதிகரிப்பானது 2000ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மிக உறுதியாகக்காணப்பட்டது. கென்யாவின் உற்பத்தியில் காணப்பட்ட குறைப்பு, கொழும்பு ஏலங்களில் ருஷ்யாவின் பங்கேற்பு மற்றும் இவ்வாண்டில் ஐ.அ.டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதித் தேய்வு ஆகியனவே இவ்விலை அதிகரிப்புக்கான முக்கிய காரணங்களாகும்.

2000ஆம் ஆண்டில் கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட அளவு 6 சதவீதத்தால் அதிகரித்து 277 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கியது. இவ்வாண்டிலான ஏற்றுமதிகளின் அளவு 7 சதவீதத்தால் அதிகரித்து 288 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கியது. விலைகளிலேற்பட்ட அதிகரிப்புடனிணைந்து, தேயிலியிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2000ஆம் ஆண்டில் 22 சதவீதத்தால் அதிகரித்து ரூ.53,133 மில்லியனாக விளங்கின. ருசியாவானது தொடர்ந்தும் இலங்கைத் தேயிலையின் மிகப் பெரும் வாங்குநராக விளங்கியதுடன் ஏற்றுமதி அளவின் 16 சதவீதத்திற்கு வகைகூறியது. ஐக்கிய அரபு எமிறேற்ஸ், சிரியா மற்றும் துருக்கி ஆகியனவே ஏனைய முன்னணி வாங்குநர்களாகக் காணப்பட்டன.

மொத்தத் தேயிலை ஏற்றுமதிகளில் தொகை வடிவிலான தேயிலை ஏற்றுமதிகள் 63 சதவீதமாக விளங்கி 183 மில்லியன் கிலோக்கிறாம்களைக் கொண்டிருந்தன. 1999ஐப் போலவே பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளின் பங்கு 2000ஆம் ஆண்டில் 37 சதவீதமாக விளங்கின. பெட்டிகள் மற்றும் தேயிலை உறைகளில் அடைக்கப்பட்ட தேயிலையின் பங்கு முறையே 30 சதவீதமாகவும் 4 சதவீதமாகவும் விளங்கிய வேளையில் ஏனைய வகைகள் எஞ்சிய 3 சதவீதத்துக்கு வகை கூறின.

2000ஆம் ஆண்டில், தேயிலை சிறு உடைமை அபிவிருத்தி அதிகார சபையானது, மீளப்பயிரிடல் மற்றும் புதிதாகப் பயிரிடல் ஆகியவற்றுக்கான உதவு தொகைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஆலோசனை மற்றும் விரிவாக்கல் பணிகள் ஆகியவற்றை வழங்குதல் வாயிலாக தேயிலைக் கைத்தொழிலுக்குத் தொடர்ந்தும் உதவி வழங்கியது. மேலும் தேயிலை சிறு உடைமை அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ந்தும் வளமாக்கிக் கொடுகடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதுடன், தேயிலை அபிவிருத்திச் சங்கங்களினூடாக 15,317 மெற்றிக் தொன்கள் கொண்ட வளமாக்கியை வழங்கி, 1999ஐவிட 28 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. அபிவிருத்தி நிதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு உடைமையாளர்கள், தேயிலை சிறு உடைமை அபிவிருத்திச் சங்கங்களினூடாக இன்றியமையாத உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக கொடுகடன் வசதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. 2000ஆம் ஆண்டின் இறுதியில் 1,172 தேயிலை சிறு உடைமை அபிவிருத்திச் சங்கங்கள் காணப்பட்டிருந்தன.

## இறப்பர்

இறப்பருற்பத்தி, 2000ஆம் ஆண்டில் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 87 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கியது. கடந்த 50 ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட ஆகக் குறைந்த உற்பத்தி இதுவாகும். மொத்த உற்பத்தியில், சிறு உடைமையாளர்கள் 72 சதவீதத்துக்கும் மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகள் எஞ்சியவற்றுக்கும் வகைகூறின. சிறு உடைமை உற்பத்தி 13 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 61.8 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கிய வேளையில், பெருந்தோட்டக் கம்பனிகளின் உற்பத்தி 2000ஆம் ஆண்டில் 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 25.4 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கியது.

**அட்டவணை 3.3**
**இறப்பர்த்துறையின் மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1998 | 1999(அ) | 2000(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம் | 96 | 97 | 87 |
| 2. பரப்பளவு (இ) | | | | |
| பயிர்செய்கைக்குட்பட்ட | '000 எக்டேயர் | 158 | 159 | 158 |
| பால் எடுக்கும் | '000 எக்டேயர் | 125 | 128 | 125 |
| 3. விளைச்சல் | கி.கி./எக்டேயர் | 768 | 755 | 694 |
| 4. வளமாக்கிப் பயன்பாடு | '000 மெ.தொன் | 15 | 11 | 13 |
| 5. மீள் நடுகை (ஈ) | எக்டேயர் | 1,160 | 643 | 793 |
| 6. புதிய பயிரிடுகை (ஈ) | எக்டேயர் | 515 | 218 | 251 |
| 7. விலைகள் | | | | |
| ஏற்றுமதிகள் (க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 67.72 | 53.90 | 66.15 |
| கொழும்பு ஆர்.எஸ்.எஸ்.1 | ரூபா/கி.கி. | 49.76 | 45.33 | 54.91 |
| 8. உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி. | 42.00 | 43.50 | 44.50 |
| 9. ஏற்றுமதிகள் | மில்.கி.கிறாம் | 41 | 43 | 36 |
| 10. உள்நாட்டு நுகர்வு | மில்.கி.கிறாம் | 54 | 54 | 55 |
| 11. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 2,808 | 2,305 | 2,179 |
| | அ.டொ.மில் | 44 | 33 | 29 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தியின்சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி(உ) | | 0.5 | 0.4 | 0.4 |

மூலங்கள்: இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) 1993இல் குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு மீதான அளவையின் அடிப்படையில் அமைந்தது.
(ஈ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச் செய்கை உதவித் திட்டத்தின் கீழான நிலப்பரப்பு.
(உ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சிக்கு பயிர்ச் செய்கையின் கீழ் குறைந்த நிலப்பரப்பு காணப்பட்டமையும், குறைவான விளைச்சலுமே காரணமாகும். அதிக இலாபம் தரக்கூடிய ஏனைய வேளாண்மைப் பயிர்களிடமிருந்தான போட்டி மற்றும் உண்மைச் சொத்து அபிவிருத்தி செயற்றிட்டங்கள் ஆகியவற்றின் காரணமாக இறப்பர் பயிர்ச் செய்கையின் கீழான நிலப்பரப்பு கடந்த ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. குறிப்பிட்ட காலப்பகுதியொன்றில் விலைகள் மந்தமடைந்து காணப்பட்டமையினால் சில சிறிய தோட்டங்களில் பாலெடுக்கும் செலவையாவது ஈடுசெய்ய முடியாதநிலையில் பாலெடுத்தலைக் கைவிட வேண்டிய நிலைமைக்கு வழிவகுத்திருந்தது. இந்நிலைமையானது சிறு உடைமைகளின் திறமையற்ற நிருவாகத்துக்கு வழிவகுத்ததுடன், மறுபுறத்தில் உற்பத்தி குறைவடைவதற்கும் வழிவகுத்தது. ஆண்டின் கடைசிப் பகுதியில் உள்நாட்டு இறப்பரின் விலைகள் அதிகரித்த போதிலும், குறிப்பிட்ட சில இறப்பர் தோட்டங்களின் தரங் குறைந்த நிலைமைகளினால், உற்பத்தியானது, விலைகள் அதிகரித்தமைக்கு உடனடியாகப் பதிலிறுக்கும் நிலையில் காணப்படவில்லை. 2000ஆம் ஆண்டில் எக்டேயரொன்றிற்கான விளைச்சல் 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 712 கிலோக் கிறாம்களாக விளங்கியது. முக்கிய இறப்பருற்பத்தி நாடுகளில் காணப்பட்ட விளைச்சல் இலங்கையின் விளைச்சலைவிட இரு மடங்காக விளங்கி, பொருத்தமான உபாயங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து, குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கக் கூடுமென்பதையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.


கடந்த சில ஆண்டுகளில் உறுதியான அதிகரிப்பைக் காட்டியிருந்த கைத்தொழில் துறையிலான இறப்பரின் உள்நாட்டு நுகர்வு, 2000ஆம் ஆண்டிலும் அதே போக்கிலேயே தொடர்ந்தது. உள்நாட்டு நுகர்வானது 55 மில்லியன் கிலோக் கிறாம்களை அடையும் விதத்தில் சிறிதளவால் அதிகரித்து உள்நாட்டு இறப்பர் உற்பத்தியின் 63 சதவீதத்துக்கு வகை கூறியது. இயற்கை இறப்பர் ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டில் 23 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 33 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கின. இறப்பரின் உற்பத்திச் செலவு 2 சதவீதத்தால் அதிகரித்து 2000ஆம் ஆண்டில் கிலோக் கிறாமொன்று ரூ.45 ஆக விளங்கியது.

இயற்கை இறப்பருக்கான பன்னாட்டு விலைகள், இறப்பர் நுகர்வு நாடுகளிலிருந்தான மோசமான கேள்வியின் காரணமாக குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. பன்னாட்டு இயற்கை இறப்பர் அமைப்பானது தனது தாங்கிருப்புக்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டமையால் அனைத்துச் சந்தைகளிலும் இயற்கை இறப்பரின் அனைத்து வகைகள் மற்றும் அனைத்துத் தரங்களுக்குமான வலைகள் வீழ்ச்சியடைந்தன. கொழும்பு ஏலத்தில் விலைகள் இவ்வாண்டில் அதிகரித்திருந்தன. ஆர்.எஸ்.எஸ்.1 மற்றும் லேட்டெக்ஸ் iX இறப்பரின் ஆண்டுச் சராசரி விலையானது 1999ஐவிட முறையே 21 சதவீதத்தாலும், 29 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன. விலைகள் அதிகரித்துக் காணப்பட்டபோதிலும் உற்பத்தியாளருக்குக் கிடைக்கக்கூடிய இலாப எல்லையானது குறைவாகவே காணப்பட்டதுடன், இறப்பர் செய்கையை கவர்ச்சி குறைந்ததாகவும் ஆக்கியது.

உற்பத்தியில் காணப்பட்ட ஆரோக்கியமற்ற போக்கினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசு புதிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்த வேளையில் தற்போதுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் உதவியை வழங்கியது. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களமானது, சிறந்த விரிவாக்கப் பணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக சிறு உடைமையாளர்களின் ஆதரவு திரட்டும் சக்தியை அதிகரிக்கவும் தமது லேட்டெக்ஸ் இறப்பரை ஆதாயமான விலையொன்றில் விற்பனை செய்வதற்கான உதவியைப் பெற்றுக் கொள்ளவும் கடன் வசதியைப் பெற்றுக் கொள்ளவுமென "துரு சவிய திட்டத்"தை நடைமுறைப்படுத்தியது. 2000ஆம் ஆண்டு இறுதியளவில் இறப்பர் செய்கைப் பண்ணப்படும் மாவட்டங்கள் அடங்கிலும் 253 "துரு சவிய சங்கங்கள்" நிறுவப்பட்டன. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களங்களும் 1,800 இறப்பர் பாலெடுக்கும் தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. புதிய பயிர்ச் செய்கை மற்றும் மீள் பயிர்ச்செய்கை உதவு தொகைத் திட்டங்கள் 2000ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டன. இவ்வாண்டில் மீள் பயிர்செய்கைக்கு ரூ.58 மில்லியனும், புதிய பயிர் செய்கைக்கு ரூ.25 மில்லியனும் வழங்கப்பட்டது. இறப்பரின் மீள் பயிர்ச்செய்கையில் 1996இலிருந்து வீழ்ச்சியடையும் போக்குக் காணப்பட்டதுடன் 2000ஆம் ஆண்டில் இந்நிலைமை எதிரிடையாக மாறியது. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின்படி 2000ஆம் ஆண்டில் புதிதாகப் பயிரிடப்பட்ட மற்றும் மீளப் பயிரிடப்பட்ட பரப்பளவு முறையே 15 சதவீதத்தாலும் 23 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின்படி இயற்கை இறப்பர் கைத்தொழிலானது அடிப்படையில் ஆர்.ஆர்.ஐ.சீ 100 மற்றும் பி.பீ 86 ஆகிய இரு இறப்பர் பதியங்களில் தங்கியுள்ளது. இவ்விரு பதியங்களையும் பாதிக்கும் கிருமி அல்லது தொற்று நோய்களினால் பாதிப்பொன்று ஏற்படுமிடத்து முழு இறப்பர்க் கைத்தொழிலும் ஆபத்தை எதிர்நோக்கும். இறப்பர் ஆராய்ச்சி நிறுவனமானது ஏற்படக் கூடிய இடரைக் குறைப்பதற்காக பதியம் வைத்தலைப் பெருமளவில் பன்முகப்படுத்துவதற்கான விதந்துரைப்பை மேற்கொண்டது. பன்முகப்படுத்தல் திட்டமானது அண்மைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

வரைபடம் 3.2
விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - இறப்பர்
(1990 = 100)




இவ்வாண்டில், மோசமடைந்து செல்லும் பன்னாட்டு இறப்பர் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பன்னாட்டு அளவில் முயற்சிகள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன. பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை செயலற்றுப் போனதன் பின்னர் பன்னாட்டு இயற்கை இறப்பர் அமைப்பிடமிருந்து சில தாங்கிருப்புக்களை வாங்குவதற்காக தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகியன கூட்டு முயற்சி அமைப்பொன்றினை உருவாக்கின. அதே வேளையில் மலேசியா, தாய்லாந்து, மற்றும் இந்தோனேசியா, ஆகிய நாடுகள் இறப்பர் ஏற்றுமதிகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட விலையொன்றை ஏற்படுத்தவும், விலைக்கு ஆதரவளிப்பதற்காக மேலதிக இறப்பரைக் குறைப்பதற்குமான திட்டமொன்றையும் அறிவித்தன. ஆகக் குறைந்த ஏற்றுமதி விலையானது நெகிழ்ச்சியுடையதாயிருக்குமென எதிர்பார்க்கப் படுவதுடன் மாற்றமடையும் உலக விலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இவை காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்படும்.

## தெங்கு

2000ஆம் ஆண்டின் தெங்கு உற்பத்தி 3,055 மில்லியன் காய்கள் என மதிப்பிடப்பட்டதுடன் இது முன்னெப்பொழுதுமில்லாத மிகச் சிறந்த உற்பத்தியாக இருந்தது. இது 1999இன் உற்பத்தியினைவிட 8 சதவிதம் உயர்வாக இருந்தமைக்கு 2000ஆம் ஆண்டில் காணப்பட்ட நல்ல பரவலான மழை வீழ்ச்சி அதேபோன்று 1999இல் காணப்பட்ட அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடு என்பன காரணமாகின. எனினும், அதிகரித்த வழங்கல் தேங்காயின் விலையில் கடுமையான வீழ்ச்சியைத் தோற்றுவித்தது.

அதிகரித்த தேங்காய் உற்பத்தியுடன் இசைந்து செல்லும் விதத்தில் மூன்று முக்கிய தெங்கு அடிப்படை உற்பத்திகளும் முன்னேற்றத்தைக் காட்டின. முன்னைய ஆண்டில் 50 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்த தேங்காய்த்துருவல் 32 சதவீதத்தினால் மேலும் உயர்வடைந்து முன்னெப்பொழுதும் உற்பத்தி செய்யப்படாத உயர்ந்த அளவை பதிவு செய்தது. பெரும்பாலும் அனைத்துத் தேங்காய்த் துருவல் ஆலைகளும் முழு இயலளவில் தொழிற்பட்டதுடன் இத்தொழில் நிறுவப்பட்ட இயலளவான ஏறத்தாழ 90,000 மெற்றிக் தொன்களை ஏறத்தாழ அடைந்துவிட்டது. தேங்காய்த்துருவல் ஏற்றுமதியும் புதிய உயர்மட்டமான 83,000மெற்றிக் தொன்களைப்பதிவு செய்ததுடன் இது

முன்னைய ஆண்டினைவிட 30 சதவீதங் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது.மற்றைய உள்ளீட்டு உற்பத்திகளும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. தேங்காயெண்ணெய் உற்பத்தி 27 சதவீதத்தினால் அதிகரித்தது. உலர்த்திய தேங்காய், உடன்காய்கள், தேங்காய் களிம்பு மற்றும் பால்மா என்பனவற்றின் ஏற்றுமதிகள் முறையே 30 சதவீதத்தினாலும், 26 சதவீதத்தினாலும், 20 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

1999இல் கவர்ச்சிகரமாகக் காணப்பட்ட தேங்காய்த் துருவலின் விலை குறிப்பாக பிலிப்பைன்சு மற்றும் இந்தோனேசியாவிலிருந்தும் தோன்றிய அதிகரித்த உலகளாவிய நிரம்பலின் காரணமாக 2000ஆம் ஆண்டில் பின்னடைவினைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில் தேய்காய்த் துருவலுக்கான உள்நாட்டு விலை சனவரியில் கி.கிறாமிற்கு ரூ.64.70இலிருந்து திசெம்பரில் கி.கிறாமிற்கு ரூ.38.50 இற்கு 40

**அட்டவணை 3.4**

**தெங்குத்துறையின் புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1998 | 1999(அ) | 2000(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (இ) | மில்.காய்கள் | 2,552 | 2,828 | 3,055 |
| தேங்காய்த்துருவல் | மில்.காய்கள்(ஈ) | 361 | 541 | 712 |
| தேங்காய் எண்ணெய் | மில்.காய்கள்(ஈ) | 334 | 309 | 387 |
| உலர்த்திய தேங்காய் (உ) | மில்.காய்கள்(ஈ) | 44 | 62 | 81 |
| உடன்காய் ஏற்றுமதிகள் | மில்.காய்கள் | 17 | 21 | 27 |
| உள்நாட்டுதேங்காய்நுகர்வு(ஊ) | மில்.காய்கள் | 1,779 | 1,799 | 1,832 |
| 2. மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர் | 439 | 439 | 439 |
| 3. மீளப் பயிரிடல்/கீழ்ப் பயிரிடல் | எக்டேயர் | 595 | 698 | 714 |
| 4. புதிய பயிரிடல் (ஏ) | எக்டேயர் | 656 | 660 | 834 |
| 5. வளமாக்கிப் பாவனை | '000மெ.தொன் | 38 | 39 | 37 |
| 6. உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 2.40 | 2.68 | 3.27 |
| 7. உடன்காயொன்றின் சில்லறை விலை | காய்க்கு ரூபா | 11.17 | 11.95 | 9.15 |
| 8. சராசரி ஏற்றுமதி விலை (க.ஏ.பெ.) | காய்க்கு ரூபா | 8.31 | 9.95 | 7.35 |
| 9. ஏற்றுமதி வருவாய் | ரூ.மில். | 6,110 | 9,119 | 9,174 |
| | ஐ.டொ.மில். | 94 | 129 | 121 |
| உள்ளீட்டு உற்பத்திகள் (எ) | ரூ.மில். | 3,632 | 5,973 | 5,786 |
| | ஐ.டொ.மில். | 56 | 84 | 77 |
| ஏனைய உற்பத்திகள் | ரூ.மில். | 2,478 | 3,146 | 3,388 |
| | ஐ.டொ.மில். | 38 | 45 | 45 |
| 10. மொ.உ.உ இன் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஐ) | | 2.9 | 3.2 | 2.2 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை.
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.


(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) மதிப்பீடு (உலத்திய தேங்காயின் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்க மாட்டாது.)
(ஈ) தெங்காய்க்குச் சமமான
1 மெற்.தொன் தேங்காய்த்துருவல் =8,000 காய்கள்.
1 மெற்.தொன் எண்ணெய் =8,800 காய்கள்.
1 மெற்.தொன் உலர்த்திய தேங்காய் =5,775 காய்கள்.
(உ) ஏற்றுமதிகள் மட்டும்.
(ஊ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 94.8 காய்கள் என மதிப்பிடப்பட்டது. கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டவை தவிர.
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஐ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உள்ளீட்டு உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலைகள் காயொன்றிற்கு முன்னைய ஆண்டின் ரூ.9.95 இலிருந்து காயொன்றிற்கு ரூ.7.35இற்கு 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதி செய்யப்பட்ட மூன்று உள்ளீட்டு உற்பத்திகளுக்கும் சமனான காய்களின் அளவு 31 சதவீதத்தினால் அதிகரித்தபோதும், இவ்வுற்பத்திகளின் பன்னாட்டு விலைகள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக ஏற்றுமதி வருவாய்கள் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. முதல் மூன்று காலாண்டுகளில் உலர்த்திய தேங்காயின் விலைகள் வீழ்ச்சியடைந்தனவெனினும் பாக்கித்தானிலிருந்தான இறக்குமதி ஈடுபாடுகள் புதுப்பிக்கப்பட்டமையின் காரணமாக இறுதிக் காலாண்டில் மேம்பாடடைந்தன.

இவ்வாண்டுக் காலத்தில் தேங்காயெண்ணெயின் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு விலைகள் இரண்டும் வீழ்ச்சியடைந்தன. 1999 திசெம்பரில் மெற்றிக் தொன்னொன்றுக்கு ஐ.அ.டொலர் 727இனை அடைந்த தேங்காய்யெண்ணெய் 2000ஆம் ஆண்டு திசெம்பரில் 54 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து மெற்றிக் தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 330 இனை மட்டும் பெற்றது. உள்ளூர்ச் சந்தையில் தேங்காயெண்ணெயின் விலை மெற்றிக் தொன்னொன்றுக்கு ரூ.38,571இற்கு 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

தெங்கிற்கான குறைந்த உள்நாட்டு விலைகள் அதிகரித்த உற்பத்தி மற்றும் எண்ணெய்க் கைத்தொழிலில் போதுமானளவு ஈர்ப்பு இயலளவு காணப்படாமை என்பனவற்றின் இணைந்த விளைவாகும். உள்நாட்டுத் தேங்காயெண்ணெய்க் கைத்தொழில் மோசமாகப் பாதிக்கப்பட்டமைக்கு, 1998 யூனில் உண்ணத்தக்க எண்ணெய்க்கு வழங்கப்பட்ட சலுகை வீதத்தீர்வையின் விளைவாக கடந்த சில ஆண்டுகளாக நாட்டிற்குள் உண்ணத்தக்க எண்ணெய் இறக்குமதிகள் குவிந்தமையே காரணமாகும். இவ்வழிமுறைகள் தேங்காய்த் துருவல் ஆலையாளர்களுக்கு ஆதரவாக மேற் கொள்ளப்பட்டன. இவர்கள் எண்ணெய்க் கைத்தொழிலிலிருந்து தேங்காய்க்கு ஏற்பட்ட போட்டி குறைவடைந்ததன் விளைவாக தேங்காய்விலைகள் வீழ்ச்சியடையக் கூடுமாகையால் அதிலிருந்தான நன்மைகளை தேங்காய்த்துருவல் ஆலையாளர்கள் பெற்றுக் கொள்ளுவர் என இவ் வழிமுறையினால் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. தேங்காயெண்ணெய் தவிர்ந்த உண்ணத்தக்க எண்ணெய் மீதான தீர்வை 35 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. தேங்காயெண்ணெயினால் போட்டியிடமுடியாத மலிவான உண்ணத்தக்க எண்ணெயைப் பெருமளவில் இறக்குமதி செய்வதற்கு இது காரணமாகியது. இதன் விளைவாக பெருமளவு

வரைபடம் 3.3
விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - தெங்கு
(1990 = 100)




எண்ணிக்கையான எண்ணெய் ஆலைகளை மூடவேண்டியிருந்தது. 1987இல் 980ஆகக் காணப்பட்ட எண்ணெய் ஆலைகளின் எண்ணிக்கை 1999இல் 156இற்கு குறைவடைந்தது. இதில் 25 சதவீதம் அல்லது 38 ஆலைகள் மட்டும் கிரமமான தொழிற்பாட்டினைக் கொண்டிருந்தன. தேங்காயெண்ணெய் ஆலைக் கைத்தொழிலின் இயலவு பெருமளவிற்கு குறைவடைந்தமையின் காரணமாக மிகையான காய்களின் உற்பத்தியை ஈர்த்துக் கொள்ளமுடியாமல் போனமையின் விளைவாக இது 2000ஆம் ஆண்டில் தேங்காயின் விலைகளில் கீழ் நோக்கிய அழுத்தமொன்றினை உருவாக்கியது. இந்நிலைமை உண்ணத்தக்க எண்ணெய்யின் மீதான அதன் தீர்வைக் கொள்கையை திருத்துவதற்கு அரசைத் தூண்டியதுடன் உண்ணத்தக்க எண்ணெய்க்கு வழங்கப்பட்ட தீர்வைத்தளர்த்தல்கள் அகற்றப்பட்டு ஏப்பிறலில் தீர்வை 25 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டது. இறுதியாக தேங்காய் விலை வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்காக அனைத்து உண்ணத்தக்க எண்ணெயின் இறக்குமதிகள் மீதான திருத்தப்பட்ட தீர்வைக்குப் புறம்பாக 25 சதவீத மேலதிகத் தீர்வையினை விதிப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்தது.

## ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள்

ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் கறுவா, மிளகு, கராம்பு, ஏலக்காய், சாதிக்காய், சாதிப் பத்திரி போன்ற பழமையான வாசனைத் திரவியங்களையும் கோப்பி மற்றும் கொக்கோ போன்ற குடிபானங்களையும் தயாரிக்கப்படாத புகையிலை, பாக்கு , வெற்றிலை, முந்திரிப் பருப்பு மற்றும் இன்றியமையாத எண்ணெய்வகை போன்ற மற்றைய வேளாண்மை உற்பத்திகளையும் உள்ளடக்கியிருந்தன. ஏனைய ஏற்றுமதிப் பயிர்களின் வளர்ச்சி கடந்த ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளதுடன் 1990இன் பின்னர், பொதுவாகப் பார்க்கையில் இப்பயிர்களிலிருந்தான வருவாய்கள் தெங்கு ஏற்றுமதிகள், மற்றும் இறப்பர் ஏற்றுமதிகளை விஞ்சிக் காணப்பட்டன. உண்மையில் 1998இலிருந்து இவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இறப்பர் மற்றும் தெங்கிலிருந்தான இணைந்த ஏற்றுமதி வருவாய்களை விஞ்சின. 2000ஆம் ஆண்டில் ஏனைய ஏற்றுமதிப் பயிர்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ரூபா பெறுமதிகளில் ரூ.11,784 மில்லியனுக்கு 1.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததெனினும் ஐ.அ.டொலர் நியதிகளில் 5.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மிளகு, சாதிக்காய் மற்றும் சாதிப் பத்திரி மற்றும் இன்றியமையாத எண்ணெய் என்பன தவிர்ந்த அனைத்துத் துணை வகைகளினதும் ஏற்றுமதி அளவுகள் வீழ்ச்சியடைந்தன.

இவ்வகையில் மிக முக்கிய பயிரான கறுவா 2000ஆம் ஆண்டில் ஏனைய ஏற்றுமதிப் பயிர்களிலிருந்தான மொத்த வருவாய்களில் ஏறத்தாழ 30 சதவீதத்திற்குப்பங்களித்தன. உலகில் கறுவாவின் மிகப் பெரிய உற்பத்தியாளராக இலங்கை விளங்கி உலகின் உற்பத்தியில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கிற்கு வகை கூறியது. இலங்கை ஏற்றுமதியில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவை முக்கியமாக சுருள்கள், சிறகுகள், பட்டை எண்ணெய், மற்றும் இலை எண்ணெய் வடிவில் காணப்பட்டன. கறுவாவின் மிகப்பெரும் பங்கு இன்னமும் சுருள் வடிவில் தொகையாக ஏற்றுமதி செய்யப்படுவதனால் பெருமளவு பெறுமதி கூட்டல்களை மேற்கொள்ளுவதற்கு இது சரியான உற்பத்தியாக இருக்கமுடியும். கறுவாத்தூள் மற்றும் வில்லைகள் தென் அமெரிக்கா, மற்றும் ஐரோப்பாவிலுள்ள நுகர்வோரிடமிருந்து உயர்ந்த கேள்வியைக் கொண்டுள்ளன. கறுவாச் செய்கையின் கீழ் 25,000 எக்டேயர்கள் இருக்கின்றன. 2000ஆம் ஆண்டில் உற்பத்தி சிறிதளவு முன்னேற்றத்தினைக் காட்டியது. எனினும் விலைகள் மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட தரம் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் காரணமாக ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சி ஏற்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக உறுதியான முன்னேற்றத்தினைக் காட்டிய மிளகு உற்பத்தி 2000ஆம் ஆண்டில் 10,676 மெற்றிக் தொன்களுக்கு மேலும் 15 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட ஏற்றுமதி வேளாண்மை உதவித்திட்டத்தின் கீழ், கடந்த சில ஆண்டுகளாகப் புதிய பயிரிடல் அதிகரித்தமையே காரணமாகும். எனினும் உலக நிரம்பல் அதிகரித்தமையின் காரணமாக, உலக சந்தையில் மிளகின் விலைகள் வீழச்சியடைந்தன. இதன் விளைவாக சராசரி ஏல விற்பனைகளும் பண்ணை விலைகளும் 1999உடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தன. விலைகளில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் மிளகின் ஏற்றுமதி வருவாய்கள் 2000ஆம் ஆண்டில் ரூ.1,587 மில்லியனுக்கு 22

சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஏற்றுமதிகளின் அளவு 29 சதவீதத்தினால் அதிகரித்தமையே காரணமாகும்.

2000ஆம் ஆண்டில் வழங்கல் பற்றாக்குறையின் காரணமாக சாதிக்காயின் உலகச் சந்தை விலைகள் மேம்பட்டமையானது ஏல விலைகளிலும் பண்ணை விலைகளிலும் அதிகரிப்புக்களைத் தோற்றுவித்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் ஏற்பட்ட அதிகரிப்பும் கவர்ச்சிகரமான விலைகளும் சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரிகளிலிருந்தான வருவாய்கள் 35 சதவீதத்தினால் அதிகரிக்க உதவின.

2000ஆம் ஆண்டில் கோப்பி, பாக்கு, ஏலக்காய் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முறையே 92 சதவீதத்தினாலும், 89 சதவீதத்தினாலும், 51 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணமாகும். 2000ஆம் ஆண்டில் கராம்பு மற்றும் வெற்றிலையிலிருந்தான வருவாய்களும் முறையே 26 சதவீதத்தினாலும், 6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

2000ஆம் ஆண்டுப் பகுதியில் 235 மெற்றிக் தொன்களுக்கு மேற்பட்ட இன்றியமையாத எண்ணெய் வகை ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் ஏற்றுமதி வருவாய்கள் ரூ.290 மில்லியனுக்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தன. இன்றியமையாத எண்ணெயில் கறுவா இலை எண்ணெய், மற்றும் சிற்றனெல்லா எண்ணெய் என்பன முக்கியமானவையாகும்.

அண்மைய ஆண்டுகளில் மலர்செடிகள் மற்றும் அலங்கார மலர்களின் பயிர்ச் செய்கை குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்து வருவதுடன் இவை ஏற்றுமதி வருவாய்களின் முக்கிய மூலமாகவும் மாறியிருக்கின்றன. பெரியளவு ஏற்றுமதி சார்ந்த பயிர்செய்கையாளர்களுக்குப் புறம்பாக, மலர்செடிகள் மற்றும் அலங்கார மலர்களை சுய வேலைவாய்ப்பு அடிப்படையில் தொழிற்படுத்துகின்ற சிறிய அளவு பயிர்ச் செய்கையாளர்களும் பெரிய எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். மலர்செடிகள், மற்றும் அலங்கார மலர்களின் பாரிய அளவுப் பயிர்ச்செய்கை நுவரெலியா கம்பகா, கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் காணப்படுகின்றன. பெருமளவான மலர்ச்செடிக் கன்றுகள் வேருடனும் வேரின்றியும் அலங்கார மலர்களான கார்நேசன், ஓர்கிட், மற்றும் அந்தூரியம் போன்றவையும் 2000ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதன் காரணமாக மலர்ச் செடிகள் மற்றும் அலங்காரப் பூக்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ரூ.624 மில்லியனுக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தன.

**அட்டவணை 3.5**
**ஏனைய ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1998 | 1999(அ) | 2000(ஆ) |
|---|---|---|---|
| கோப்பி | 2,343 | 3,249 | 2,549 |
| கொக்கோ | 1,904 | 1,147 | 1,351 |
| கருவாச்சுருள் | 10,813 | 13,466 | 13,494 |
| மிளகு | 6,776 | 9,284 | 10,676 |
| கராம்பு | 1,744 | 4,181 | 1,722 |
| ஏலம் | 60 | 74 | 62 |
| சாதிக்காயும் சாதிப்பத்திரியும் | 1,257 | 1,221 | 1,126 |

மூலம்: வேளாண்மை ஏற்றுமதித் திணைக்களம்.

(அ) திருத்தியமைக்கப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.


## 3.4 உள்நாட்டு வேளாண்மை

### நெல்

2000ஆம் பயிர்ச்செய்கை ஆண்டில் நெல் உற்பத்தி 2.86 மில்லியன் மெற்றிக் தொன்களாக அமைந்து (137 மில்லியன் புசல்கள்) 1999இல் பதிவு செய்யப்பட்ட உச்ச வெளியீட்டிலிருந்தும் மிகக் குறைந்த வீதமான 0.3 சதவீதம் குறைவாகக் காணப்பட்டது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி சிறுபோக உற்பத்தியில் ஏற்பட்ட 4 சதவீத வீழ்ச்சியையும் பெரும்போகத்தில் 2 சதவீத அதிகரிப்பினையும் பிரதிபலித்தது. விதைக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு வீழ்ச்சியைப் பதிவு செய்த வேளையில், எக்டேயரொன்றிற்கான வளமாக்கிப் பயன்பாடு வீழ்ச்சியடைந்தபோதும் சராசரி விளைச்சல் மேம்பாட்டினைக் காட்டியது.

1999/ 2000 பெரும் போகத்தில் உற்பத்தி 1.8 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 2 சதவீதத்தினால் அதிகரித்தது. விதைக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் வீழ்ச்சி காணப்பட்டமையினால் பெரும்போக அறுவடையில் அடையப்பட்ட இவ்வதிகரிப்பு முழுவதற்கும் விளைச்சலில் ஏற்பட்ட முன்னேற்றமே காரணமாகும்.

உற்பத்தியில் ஏற்பட்ட மிகக் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் குருநாகல், பொலனறுவை, அநுராதபுரம், மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலிருந்து அறிவிக்கப்பட்டமையை எடுத்துக் காட்டுகின்றன. பெரும்போகத்தில் மிகச் சிறந்த உற்பத்தியைக் கொண்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள குருநாகல் மாவட்டம் முன்னைய பெரும்போகத்தினைவிட 12 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்த வேளையில் இரண்டாவது சிறந்த உற்பத்தியைக் கொண்டிருந்த பொலனறுவை மாவட்டம் முன்னைய போகத்தினைவிட 15 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இவ்விரு மாவட்டங்களும் சேர்ந்து பெரும்போக உற்பத்தியில் பெரும்பாலும் காற்பங்கிற்கு வகைகூறின. குருநாகல் மாவட்டத்தின் உற்பத்தி அதிகரித்தமைக்கு விளைச்சலில் ஏற்பட்ட 14 சதவீதமான




வரைபடம் 3.4
நெல் உற்பத்தி

அதிகரிப்பே காரணமாக இருந்தவேளையில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு 2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. அதேவேளை பொலனறுவை மாவட்டத்தில் விளைச்சலும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பும் ஒவ்வொன்றும் 7 சதவீதத்தினால் அதிகரித்தன. 1999 பெரும் போகத்தில் உயர்ந்த வெளியீட்டினைப் பதிவு செய்த அம்பாறை மாவட்டம் உற்பத்தியில் 17 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்து மூன்றாவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டது. ஐந்து முக்கிய நெல் உற்பத்தி செய்யும் மாவட்டங்களான குருநாகல், பொலனறுவை,அம்பாறை, அநுராதபுரம் மற்றும் மகாவலி "எச்" பிரதேசம் என்பன ஒன்று சேர்ந்து பெரும்போக நெல் உற்பத்தியில் அரைப்பங்கிற்கும் கூடுதலான அளவிற்கு (53 சதவீதம்) வகைகூறின.

1999இல் முன்னெப்பொழுதும் பெறப்படாத மிக உயர்ந்த உற்பத்தியைக் கொண்டிருந்த சிறுபோக நெல் உற்பத்தி 2000ஆம் ஆண்டில் 1.1 மில்லியன் மெற்றிக்தொன்னிற்கு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2000ஆம் ஆண்டு சிறு போகத்தில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் சராசரி விளைச்சல் 5 சதவீதத்தினால் அதிகரித்தது.

அம்பாறை, பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்கள் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எனினும் குருநாகல் மற்றும் மகாவலி "எச்" பிரதேசங்களின் உற்பத்தி கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்தது. குருநாகலின் உற்பத்தி 61 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் மாகாவலி "எச்" பிரதேசம் 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நீர்ப்பாசனத்திற்கான நீர் போதாமையின் காரணமாக குருநாகல் மற்றும் மகாவலி "எச்" பிரதேசம் இரண்டினதும் பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பும் விளைச்சலும் குறைவடைந்தன.

அம்பாறை மாவட்டம் தொடர்ந்தும் ஏழாவது ஆண்டாக மிக உயர்ந்த சிறு போக உற்பத்தியைப் பதிவு செய்ததுடன் மொத்த சிறுபோக உற்பத்தியில் ஐந்திலொரு பங்கிற்கும் கூடுதலான அளவிற்கு வகைகூறியது. அம்பாறை, பொலனறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து சிறுபோக உற்பத்தியில் பெரும்பாலும் அரைப்பங்கிற்கு வகைகூறின.

ஆண்டுச் சராசரி விளைச்சலில் அவதானிக்கப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கு தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக காணப்பட்டது. ஆண்டுச் சராசரி விளைச்சல் முன்னைய ஆண்டினைவிட 5 சதவீதத்தினால் எக்டேயருக்கு 3,854 கி.கிறாம்களுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து பதிவு செய்யப்பட்ட மிகச் சிறந்த ஆண்டுச் சராசரியாக விளங்கியது. பெரும்போகம் மற்றும் சிறுபோகம் இரண்டிலும் சராசரி விளைச்சல் ஒவ்வொன்றும் 5 சதவீதத்தினால் அதிகரித்தமையானது பொதுவான சராசரி விளைச்சல் மேம்பாடடைவதற்கு சாதகமான முறையில் பங்களித்தது. பெரும்போகம் சிறுபோகம் ஆகிய இரு காலப்பகுதிக்குமாக அறிவிக்கப்பட்ட சராசரி விளைச்சல் இரு பயிர்ச்செய்கைப் போகங்களிலும் அறிவிக்கப்பட்டவற்றில் மிகச் சிறந்தனவாக இருந்தன. பெரும்போக விளைச்சல் எக்டேயருக்கு 3,798 கி.கிறாம்களாக அமைந்து முன்னைய மிகச் சிறந்த விளைச்சலான 1987இன் பெரும்போக விளைச்சலை 3 சதவீதத்தினால் விஞ்சிக் காணப்பட்டது. சிறுபோகத்திற்கான சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 3,957 கி.கிறாம்களாக அமைந்து முன்னைய மிகச் சிறந்த விளைச்சலான 1998இன் சிறுபோக விளைச்சலைவிட 4 சதவீதம் உயர்வாக இருந்தது. 2000ஆம் ஆண்டு சிறுபோகத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 82 சதவீதத்திற்கு வகைகூறிய பாரிய மற்றும் சிறிய நீர்ப்பாசனங்களைப் பெறும் பிரதேசங்களின் சராசரி விளைச்சல் 2000ஆம் ஆண்டில் அதிகரித்தது. விளைச்சலில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பின் இணைந்த தாக்கம் மழைநீரை நம்பிய பிரதேசங்களின் விளைச்சலில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் மொத்த விளைச்சலில் அதிகரிப்பு ஏற்படுவதற்கு சாதகமான முறையில் பங்களித்தது.

மேம்பட்ட நடைமுறைகளின் பொதியொன்றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் உற்பத்தியாகத்தினை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு வேளாண்மைத் திணைக்களத்தின்விரிவாக்கற் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு "யாயா" செய்முறை நிகழ்ச்சித்திட்டம் ஐந்தாவது ஆண்டாகத தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. முன்னைய ஆண்டின் 34,200 வேளாண்மையாளர் குடும்பங்கள் நன்மையடைந்த 1,700 செய்முறைப் பயிற்சிகளுக்கெதிராக இவ்வாண்டில்

ஏறத்தாழ 54,000 வேளாண்மையாளர் குடும்பங்கள் நன்மைகளைப் பெற்ற ஏறத்தாழ 2,300 "யாயா" செய்முறைப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. எனினும் செய்முறைப்பயிற்சி உள்ளடக்கிய மொத்த நிலப்பரப்பு 58,200 எக்டேயர்களிலிருந்து 46,000 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்து. இவ்வாண்டில் செய்முறைப் பயிற்சிக்காக சிறிய வேளாண்மையாளர்கள் தெரிவு செய்யப்பட்டமையை எடுத்துக்காட்டியது.

1999இன் பிற்பகுதியில் காணப்பட்ட சலுகைத் தீர்வை வீதங்களின் கீழ் அரிசி இறக்குமதி செய்யப்பட்டமையின் விளைவாக வேளாண்மையாளர்கள் தமது நெல்லைச் சந்தைப்படுத்துவதில் இடர்பாடுகளைத் எதிர்நோக்கினர். 1999இன் இறுதிக் காலாண்டில் செய்யப்பட்ட அரிசிமீதான இறக்குமதித் தீர்வைக்குறைப்பு, பெருமளவு அரிசி அதாவது 1999 காலப்பகுதியின் இறக்குமதி செய்யப்பட்ட மொத்த அரிசி இறக்குமதியில் மூன்றில் இரண்டிற்கும் கூடுதலான அளவு அரிசி இக்காலப்பகுதியில் நாட்டில் இறக்குமதி செய்யப்படுவதற்கு காரணமாகியது. இவ்விறக்குமதிகள் உள்ளூர் ஆலையாளர்களையும் நெல் கொள்வனவிற்காக வர்த்தக வங்கிகளிலிருந்து நிதியினைப் பெற்றுக்கொண்ட நெல்லை இருப்பில் வைத்திருப்போரையும் கடுமையாகப் பாதித்தது. சில ஆலையாளர்கள் தமது ஆலைகளை மூடிவிட்டனர். அவ்வப்போதைய தீர்வைக் குறைப்புக்களும் அதனுடன் இணைந்த நிச்சயமற்ற தன்மைகளும் நெல் ஆலையாளர்களும் இருப்பில் வைத்திருப்போரும் 1999/ 2000 பெரும்போகத்தின் பின்னர் நெல்லைப் பாரிய அளவில் கொள்வனவு செய்து இருப்பில் வைப்பதற்கு அவர்களைத் தயங்கச் செய்தமையானது, நெல்லின் விலைகளில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தது. பண்ணை விலைகள் மிகுந்த வருமானத்தைத் தராத 2001ஆம் ஆண்டின் பெரும்போக அறுவடையிலும் கூட இக் கொள்கையின் மோசமான தாக்கம் உணரப்பட்டது.

இந்நிலைமையானது நெல்லின் விலைகளை உறுதிப்படுத்துவதற்கு கூ.மொ. விற்பனை நிலையம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களினூடாக தலையிடுவதற்கு அரசினைத் தூண்டியது. எனினும் ஆண்டின் பெரும்பகுதியில் நெல்லின் பண்ணை விலைகள் கூ.மொ.விற்பனை நிலையத்தினால் அறிவிக்கப்பட்ட கொள்வனவு விலையைவிட மிகக் குறைவாகவே இருந்தன. கூட்டுறவுச் சங்கங்களும் கூ.மொ.விற்பனை நிலையமும் கி.கிறாமொன்று ரூ.10 இற்கு மேற்பட்ட விலை வீச்சில் நெல்லைக் கொள்வனவு செய்தன. போகத்தின் இறுதிப்பகுதியில் 2000 ஆம் ஆண்டு ஏப்பிறலில் அரசு வேளாண்மையாளர்களிடமிருந்து ஒரு கி.கிறாம் நெல்லை ரூ.13 இற்கு கொள்வனவு செய்யுமாறு பணித்தது. பெரும்போக அறுவடையின்போது கூ.மொ.விற்பனை நிலையம் ஏறத்தாழ 50,000 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்தது. விற்பனையைக் குறைந்த விலையில் மேற்கொள்ள வேண்டியிருந்தமையினால் இத் தொழிற்பாட்டின் காரணமாக கூ.மொ.விற்பனை நிலையத்திற்கு ஏற்பட்ட செலவு ரூ.75 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிறுபோக அறுவடையின்போது ஒரு கி.கிறாம் நெல்லை ரூ.13 இல் கொள்வனவு செய்யுமாறு கூ.மொ.விற்பனை நிலையத்தையும் கூட்டுறவுச் சங்கங்களையும் அரசு பணித்தது. இரு நிறுவனங்களுக்கும் சலுகை ரீதியில் கொடுகடன் வழங்கப்பட்டது. சிறு போகத்தில் கூ.மொ.விற்பனை நிலையம் ஏறத்தாழ 38,000 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்தது.

**அட்டவணை 3.6**
**நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1999 (அ) | | | 2000 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 551 | 345 | 896 | 549 | 329 | 878 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 542 | 332 | 874 | 526 | 306 | 832 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு | '000 எக்டேயர்கள் | 483 | 298 | 781 | 469 | 273 | 742 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 1,748 | 1,120 | 2,868 | 1,781 | 1,078 | 2,860 |
| | '000 புசல்கள் | 83.781 | 53,681 | 137,462 | 85,374 | 51,668 | 137,042 |
| விளைச்சல் (இ) | கி.கி. எக்டேயர்கள் | 3,618 | 3,760 | 3,672 | 3,798 | 3,957 | 3,856 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில்லியன் | 208 | 110 | 318 | 256 | 118 | 374 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொன்கள் | - | - | 214 | - | - | 15 |
| (நெல்லிற்குச் சமன்) | ('000 மெ.தொன்கள்) | - | - | 306 | - | - | 21 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதேவேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: வேளாண்மைத் திணைக்களம்.
வேளாண்மை, காணிகள், அமைச்சு.
இலங்கைச் சுங்கம்.
இலங்கை மத்திய வங்கி.

நெல்லின் உள்நாட்டு விலையை மேம்படுத்தும் நோக்குடன் அரசு 2000ஆம் ஆண்டு யூலை 17ஆம் நாள் தொடக்கம் அரிசி இறக்குமதிக்கு உரிமத் தேவைப்பாடுகளை விதித்தது. இவ்விறக்குமதிக் கட்டுப்பாடு சிறந்த உள்நாட்டு அறுவடையுடன் இணைந்து அரிசி இறக்குமதிகள் பெருமளவில் வீழ்ச்சியடைய வழிவகுத்தது. 2000ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, முன்னைய ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 214,000 மெற்றிக் தொன்னுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 14,900 மெற்றிக் தொன்களாகக் காணப்பட்டது.

பெரும்போக அறுவடையின்போது நிலவிய தாழ்ந்த நெல் விலைகள் வளமாக்கிப் பாவனையை ஆர்வமிழக்கச் செய்தன. இதன்விளைவாக நெற்றுறைக்கான வளமாக்கிப்பாவனை குறிப்பாக சிறுபோகத்தில் 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### ஏனைய களப்பயிர்கள்

ஏனைய களப்பயிர்கள்துறை கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது. உருளைக்கிழங்கு மற்றும் நிலக்கடலை உற்பத்தி அதிகரிப்புக்களைப் பதிவு செய்தவேளையில் பெரிய வெங்காயம், மிளகாய், உழுந்து, பயறு, எள்ளு, சோளம் என்பனவற்றின் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்தன.

உருளைக்கிழங்கு உற்பத்தி 78 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. பயிர்ச் செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு விளைச்சலில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பன இணைந்து அதிகரித்த உற்பத்திக்குப் பங்களித்தன. உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான தடை அகற்றப்பட்ட பின்னர் 1996ஆம் ஆண்டிலிருந்து வீழ்ச்சியடைந்திருந்த உருளைக்கிழங்கு பயிர்செய்கையின் கீழான பரப்பளவு அதிகரித்த தீர்வையின் மூலம் வழங்கப்பட்ட உயர்ந்த பாதுகாப்பின் காரணமாக 3,642 எக்டேயர்களுக்கு 68 சதவீதத்தினால் அதிகரித்தது. 2000ஆம் ஆண்டு ஓகத்து 30ஆம் நாளன்று தீர்வை வீதங்கள் திருத்தப்பட்டன. 2000ஆம் ஆண்டு திசெம்பர் 7 வரை ஏற்கனவேயுள்ள 35 சதவீத தீர்வைக்கு மேலாக 35 சதவீத மேலதிகக் கட்டணம் ஒன்று விதிக்கப்பட்டது. அதன் பின்னர் தீர்வை மீண்டுமொருமுறை திருத்தப்பட்டு 2000ஆம் ஆண்டு திசெம்பர் 8ஆம் நாளன்று கி.கிறாமொன்றுக்கு ரூ.20 கொண்ட குறிப்பிட்ட தீர்வையொன்று விதிக்கப்பட்டது. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக உருளைக்கிழங்கின் விளைச்சல் அதிகரிப்பினைக் காட்டியது. பயிர்ச் செய்கையாண்டில் எக்டேயரொன்றிற்கான உருளைக்கிழங்கு விளைச்சல் 13.2 மெற்றிக் தொன்னிற்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தது.

1999இல் மூன்று மடங்காக இருந்த பெரிய வெங்காயத்தின் உற்பத்தி 2000ஆம் ஆண்டில் 36,000 மெற்றிக் தொன்களுக்கு 42 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1999இன் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு குறைந்த விலைகளைத் தோற்றுவித்து வேளாண்மையாளர்கள் தமது உற்பத்திகளை விற்பதில் இடர்பாடுகளை உருவாக்கியமையானது 2000ஆம் ஆண்டின் உற்பத்தியை ஊக்கமிழக்கச் செய்தது.

1993ஆம் ஆண்டிலிருந்து வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் காட்டிய மிளகாய்உற்பத்தி 2000ஆம்அண்டில் 14,000 மெற்றிக் தொன்களுக்கு மேலும் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியில் மிளகாய் பயிரிடப்பட்ட பரப்பளவு கடுமையாக வீழ்ச்சியடைந்து 2000ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட பரப்பளவு 1993இல் பயிரிடப்பட்ட அளவினைவிட அரைப்பங்கிற்கும் குறைவானதாக இருந்தது. 1996இல் மிளகாய் இறக்குமதிக்கான உரிமத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டதன் பின்னர் இவ்வீழ்ச்சி மிகக்கடுமையானதாக இருந்தது. மேலும் 1998இற்குப் பின்னர் கூ.மொ.விற்பனை நிலையம் மிளகாயின் உள்ளூர் கொள்வனவு விலையை குறிப்பிடத்தக்களவிற்கு குறைத்தது. 2000ஆம் ஆண்டில் உழுந்து மற்றும் பயறு என்பனவற்றின் உற்பத்தியும் முறையே 19 சதவீதத்தினாலும் 15 சதவீதத்தினாலும் மேலும் வீழ்ச்சியடைந்தது.

உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பின்னணியில் பெரிய வெங்காயம் மற்றும் மிளகாய் இறக்குமதிகள் முறையே 40 சதவீதத்தினாலும் 15 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை உழுந்து இறக்குமதி 49 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பயறின் இறக்குமதி 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

2000ஆம் ஆண்டு மார்ச்சில் விலங்குத் தீன் கைத்தொழிலுக்கான சோளத் தானியத்தின் இறக்குமதி மீதான உரிமத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டதுடன் உரிமத்தின் கீழ் இப்பண்டம் இருந்தவேளையில் அனுமதிக்கப்பட்ட தீர்வையற்ற இறக்குமதிகளுக்கெதிராக 10 சதவீதங் கொண்ட இறக்குமதித் தீர்வையொன்று விதிக்கப்பட்டது. சோளம் ஏனைய களப்பயிர்கள் பயிரிடப்படட மொத்த நிலப்பரப்பில் பெரும்பாலும் காற்பங்கிற்கு வகைகூறியது. சோளப் பயிர்ச் செய்கையாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட மிகப் பெரிய பிரச்சனை அவர்களது உற்பத்தியை நியாயமான விலையில் சந்தைப்படுத்த முடியாமல் இருந்தமையேயாகும். பெரும்பாலான சோளப்பயிர்ச் செய்கையாளர்கள் எந்தவொரு வளமாக்கியையும் பயன்படுத்தவில்லை. அவர்கள் உயர்தர விளைச்சலைத் தருகின்ற விதை வகைகளையும் பயன்படுத்தவில்லை. இதனால் பெறப்பட்ட விளைச்சல் உள்ளார்ந்த மட்டங்களிலும் பார்க்க மிகக் குறைவாகவே இருந்தன. இவ்வாண்டில் விலங்குத் தீன் கைத்தொழிலுக்காக ரூபா

ஒரு மில்லியனுக்கு மேற் பெறுமதி கொண்ட 115,000 மெற்றிக் தொன் சோளத்தானியமும் இறக்குமதி செய்யப்பட்டது. விலங்குத்தீன் உற்பத்திக்கு மூலப் பொருளாக சோளத்தைப் பயன்படுத்தும் பொருட்டு பதனிடல் கைத்தொழில் சோளத்தைப் பெற்றுக் கொள்வதனால் முன்னோக்கிய சந்தைப் பொறிமுறை நன்கு தொழிற்படக்கூடிய ஒரு துறையாக இது காணப்படுகின்றது. விலங்குத்தீன் உற்பத்தியாளர்களும் அதேபோன்று வேளாண்மையாளர்களும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் மூலம் நன்மைகளைப் பெறமுடியும். பருவகாலம் தொடங்குவதற்கு முன்னர் வேளாண்மையாளர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய விலைகள் பற்றி அவர்களுக்கு உறுதிப்பாடு வழங்கப்படுமாயின், சிறந்த பயிராக்க மூலப்பொருட்களையும், வளமாக்கிப் பயன்பாட்டினையும் பயன்படுத்தி செறிவான பயிர்ச் செய்கையொன்றில் முதலீடு செய்வது பற்றிய தீர்மானத்தினை வேளாண்மையாளர் மேற்கொள்ளமுடியும். அதே போன்று விலங்குத்தீன் தயாரிப்பாளர்களுக்கும் அவர்களது மூலப் பொருளின் விலைகள் பற்றி முன்னமே தெரிந்திருக்குமாயின் அவர்களும் தமது முதலீட்டு மாதிரி பற்றித் தீர்மானித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## காய்கறிகளும் பழங்களும்

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் 2000ஆம் ஆண்டில் காய்கறிகளின் உற்பத்தி, 580,000 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மலை நாடு மற்றும் தாழ்நிலக் காய்கறிகள் இரண்டும் ஒவ்வொன்றும் 5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பு அதிகரித்தமையே காரணமாகும். எனினும் பல காய்கறி வகைகளின் விலைகள் 1999இனைவிட சார்புரீதியில் உயர்வாகவே இருந்தன.தாழ் நிலக் காய்கறிகளினதும் மலைநாட்டுக் காய்கறிகளினதும் சராரி சில்லறைவிலைகள் முறையே கி.கிறாமொன்றிற்கு ரூ.25.00 – ரூ.35.00 வீச்சிலும் கி.கிறாமொன்றிற்கு ரூ.28.00 – ரூ.42.00 இற்குமிடையிலான வீச்சிலும் காணப்பட்டன.

காய்கறிகள் உடன் மற்றும் பதனிடல் ஆகிய இரு வடிவங்களிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. காய்கறிகளில் வெள்ளரிக்காய், ஓரளவு பதனிடப்பட்ட மற்றும் பதனிடப்பட்ட வடிவத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கியமான விடயமாகும். ஏற்றுமதியாளர்களினால் வாங்கப்படவேண்டும் என்ற ஒழுங்கின் கீழ் வெள்ளரிக்காய் வர்த்தக ரீதியாக பயிர்செய்யப்படுகின்றது. ஏற்றுமதியாளர்கள் வேளாண்மையாளருக்கு தொழில்நுட்ப அறிவையும் அதேபான்று உள்ளீடு மற்றும் கொடுகடன்களையும் வழங்குவதுடன் உற்பத்திகளையும் உத்தரவாத விலையில் மீண்டும் வாங்கிக் கொள்கிறார்கள். 2000ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட வெள்ளரிக்காயின் அளவு 2.6 மில்லியன் கிலோக்கிறாம்களாகவும் ஏற்றுமதி வருவாய்கள் ரூ.179 மில்லியனாகவும் இருந்தன. ஏற்றுமதி அளவில் 8 சதவீத வீழ்ச்சி காணப்பட்டபோதும் ஏற்றுமதி வருவாய்கள் 20 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கூடியளவு கூட்டப்பட்ட பெறுமதியே காரணமாகும். வெள்ளரிக்காய்க்கான முக்கிய சந்தையாக யப்பான் காணப்பட்டது. லீக்ஸ், கறிமிளகாய், மற்றும் கலப்பு காய் கறிகள் உடன்காய்கள் வடிவில் ஒப்பீட்டுரீதியில் குறைந்த அளவில் மாலைதீவு, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பதனிடப்பட்ட காய்கறிகள் இன்னமும் மிகச்சிறிய அளவிற்கே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கை அன்னாசி, வாழைப்பழம், மற்றும் இறம்புட்டான் போன்ற மிகச்சில வகைப் பழவகைகளுக்கு மாத்திரமே நடைமுறைப் படுத்தப்பட்டன. பழ ஏற்றுமதிகளில் அன்னாசி முக்கிய வகையாக அமைந்து பழங்களின் ஏற்றுமதி அளவில் 42 சதவீதத்திற்கு வகைகூறியது. மாம்பழம், எலுமிச்சம்பழம் மற்றும் வாழைப்பழம் என்பன சிறியளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. உடன்பழ வர்க்கங்களின் ஏற்றுமதியை உயர்த்துவதற்கு, உயர் விளைச்சலைக் கொண்ட புதிய வகைகளுடன் கூடிய வர்த்தகப் பயிர்ச்செய்கை இன்றியமையாததாகும். 2000ஆம்ஆண்டில் உடன்மற்றும் உலர்த்திய பழ வர்க்கங்களின் (புளிஉட்பட) ஏற்றுமதி 6000 மெற்றிக் தொன்களாகவும் வருவாய்கள் ரூ.339 மில்லியனாகவும் காணப்பட்டன. மாலைதீவு, மத்திய கிழக்கு மற்றும் சேர்மனி என்பன பழவகைகளின் ஏற்றுமதிக்கான முக்கிய சந்தைகளாகக் காணப்பட்ட வேளையில் பாக்கித்தான் மற்றும் இந்தியா என்பன புளிக்கான முக்கிய சந்தையாகக் காணப்பட்டன. பழச்சாறு, ஜெலி, பழஊறல், பழப்பாகு போன்ற பதனிடப்பட்ட உற்பத்திகளும் தகரத்திலடைக்கப்பட்ட பழவகைகளும் கூட இச்சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் ரூ.235 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டது.

அறுவடைக்குப் பின்னைய கையாளால், களஞ்சியப்படுத்தல் மற்றும் கொண்டு செல்லல் என்பனவற்றின் மோசமான தன்மையின் காரணமாக அறுவடைக்கும் சந்தைப்படுத்தலுக்குமிடையில் ஏறத்தாழ 40 சதவீதமான காய்கறிகளும் பழவகைகளும் வீணாகிவிடுவதாக அறியப்படுகிறது. விரயங்களைக் குறைப்பது விலைகளைக் குறைக்கின்ற அதே வேளையில் பதனிடலையும் களஞ்சியப்படுத்துவதனையும் மேம்படுத்துவது விலைத் தளம்பல்களைக் குறைக்கும். அறுவடைக்குப் பின்னரான சிறந்த களஞ்சியப்படுத்தல், கையாளால் நடைமுறைகள் தொடர்பான அறிவினை

ஊட்டுவதற்காக பயிர்ச் செய்கையாளர்களின் நன்மைகருதி ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, வேளாண்மைத் திணைக்களம் என்பன பல அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டன. பொருத்தமான களஞ்சியப்படுத்தல் வசதிகளுக்கான ஏற்பாடுகள், கொண்டு செல்லலின்போது உற்பத்திகளைப் பொதியிடுவதற்குப் பொருத்தமான கொள்கலன் வசதிகள், கவனமாகக் கையாள்வதன் முக்கியத்தவம் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியமை என்பன பழவகை மற்றும் காய்கறிகளின் அறுவடைக்கும் பின்னரான இழப்புக்களைக் குறைப்பதற்கு எடுக்கப்படக்கூடிய சில முக்கியமான வழி முறைகளாக இருந்தன. வேளாண்மை உற்பத்திகளின் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைப்பதற்கான ஆராய்ச்சியினையும் புதிய தொழில்நுட்பங்களின் அபிவிருத்தியையும் மேற் கொள்வதற்காக 2000ஆம் ஆண்டில் அறுவடைக்குப் பின்னைய நிலையம் என்ற புதிய நிறுவனமொன்று அநுராதபுரத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டில் இலங்கை ரூ.1.2 பில்லியன் பெறுமதியான 41,000 மெற்றிக் தொன் பழங்களை இறக்குமதி செய்தது. இது 1999இல் இறக்குமதி செய்யப்பட்ட அளவைவிட 13 சதவீதமானதொரு அதிகரிப்பாகும். முன்னைய ஆண்டினைப் போன்றே அப்பிள், தோடம்பழம், பேரிச்சம்பழம் மற்றும் திராட்சை என்பன இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பழவர்க்கங்களாகும். 2000ஆம் ஆண்டில் பழவர்க்கங்களின் வர்த்தகப் பற்றாக்குறை ரூ.834 மில்லியனாக இருந்தது.


### சீனி

இலங்கையில் சீனிக் கைத்தொழில் நான்கு தசாப்தங்களுக்குமேலாக நிலைபெற்றிருந்தபோதும் 2000ஆம் ஆண்டின் மொத்த வழங்கலில் 10 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறியது. இக்காலப் பகுதியில் குறிப்பிட்ட சில அமைப்பியல் ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும், கைத்தொழிலின் அபிவிருத்தி எதிர்பார்ப்புக்களுக்கு மிகக் கீழேயே இருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு ஒரு போதுமே அடையப்படவில்லை. அண்மைய ஆண்டுகளில் இத்துறை கரும்பு, மற்றும் சீனி உற்பத்தி ஆகிய இரு நியதிகளிலும் எதிர்க்கணிய வளர்ச்சியையே காட்டியது. 1990களில் தொழிற்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் நான்கிலிருந்து இரண்டிற்குக் குறைவடைந்தது. இதனால் சீனிக் கைத்தொழிலின் செயலாற்றம் ஏமாற்றம் தருவதாக அமைந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனியில் பெருமளவிற்கு தங்கியிருக்கும் நிலையைத் தோற்றுவித்தது. உயர்ந்த உற்பத்திச் செலவு மற்றும் குறைந்த பன்னாட்டு விலைகளின் விளைவாக இலாபம் தராத விலைகள் என்பனவற்றின் காரணமாக தொழிற்படுகின்ற தொழிற்சாலைகள்கூட நிதியியல் நெருக்கடிகளை எதிர்நோக்கின்றன. தற்பொழுது சீனிக் கைத்தொழில் முழுமையாக தனியார் மயமாக்கப்பட்டோ அல்லது முழுமையாக அரசுடைமையாக்கப்பட்டோ இருக்காமை நெறியாள்கையும் தலைமைத்துவமுமில்லாத ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது. கரும்பு விலையிடல் கொள்கையிலும் நில உடைமைகளின் அளவிலும் குறிப்பிட்ட சரியான வழிமுறைகளை மேற்கொண்டாலொழிய, சீனிக் கைத்தொழில் பொருளாதார ரீதியாக ஆற்றல் வாய்ந்தவொரு தொழில் முயற்சியாக மாற்றமுற முடியாது. தற்பொழுது தனியார்துறை கரும்பு கொள்வனவிற்கான கொடுப்பனவு, தரத்தினைக் கருத்திற் கொள்ளாது நிறையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருந்தது. கரும்பிலிருந்து சீனி பெறும் வீதம் கரும்பின் தரத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளமையினால் தரத்தினை அடிப்படையாகக் கொண்ட விலையிடல்முறை சிறந்த தரமான கரும்பினை வழங்குவதற்கான ஊக்குவிப்பாக விளங்கும்.

2000ஆம் ஆண்டின் சீனி உற்பத்தி 64,000 மெற்றிக் தொன்களுக்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சீனி வெளியீட்டில் ஏறத்தாழ 63 சதவீதத்திற்கு வகைகூறிய பெல்வத்தை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உற்பத்தியில் 18 சதவீதம்கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. செவனகலவின் வெளியீடு 24,000 மெற்றிக் தொன்களுக்கு 41 சதவீதத்தினால் மேம்பட்டபோதும் மொத்த அதிகரிப்பினைப் பதிவு செய்வதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. இங்குரான தொழிற்சாலை முகாமைத்துவப் பிரச்சனைகளினால் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகத் தொழிற்படவில்லை.

சீனியின் வெளியீடு பிழியப்பட்ட கரும்பின் அளவு மற்றும் சீனி பெறும் வீதம் என்பனவற்றில் தங்கியிருக்கிறது. பெல்வத்தையில் பிழியப்பட்ட கரும்பு 500,000 மெற்றிக் தொன்களுக்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் இதில் 63 சதவீதமான தனியார்

வரைபடம் 3.5
மொத்தச் சீனிக் கிடைப்பனவு



அட்டவணை 3.7
சீனி உற்பத்தி மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | செவனகல சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் (ஈ) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1999(அ) | 2000(ஆ) | 1999(அ) | 2000(ஆ) | 1999(அ) | 2000(ஆ) |
| 1. கரும்பு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (முளை தோன்றியது) (இ) | எக்டேயர்கள் | 3,314 | 3,540 | 4,662 | 3,497 | 7,976 | 7,037 |
| 2. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு (இ) | எக்டேயர்கள் | 2,413 | 2,753 | 3,712 | 3,493 | 6,125 | 6,246 |
| 3. அறுவடை செய்யப்பட்ட கரும்பு (இ) | மெ.தொன்'000 | 190 | 286 | 209 | 183 | 399 | 469 |
| 4. தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு | மெ.தொன்'000 | 2 | 2 | 344 | 317 | 346 | 319 |
| 5. பிழியப்பட்ட கரும்பின் அளவு | மெ.தொன்'000 | 192 | 287 | 553 | 500 | 745 | 787 |
| 6. சராசரி விளைச்சல் (இ) | மெ.தொன்/எக்டேயர் | 79 | 83 | 56 | 52 | 68 | 68 |
| 7. சீனி உற்பத்தி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) | மெ.தொன்'000 | 17 | 24 | 49 | 40 | 66 | 64 |
| 8. சீனி பெறப்பட்ட வீதம் (ஈ) | % | 8.63 | 8.44 | 8.77 | 8.01 | 8.74 | 8.17 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) முதன்மைத் தோட்டங்களையும் ஒதுக்கீட்டாளர்களையும் உள்ளடக்கும்.

மூலங்கள்: வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கைத்தொழில்கள்.
வரையறுக்கப்பட்ட செவனகலை சீனிக் கைத்தொழில்கள்.

(ஈ) கரும்பு பெறும் வீதம் = $\frac{\text{உற்பத்தி செய்யப்பட்ட சீனி}}{\text{ஆலையிடப்பட்ட கரும்பின் அளவு}}$

கரும்புக் கொள்வனவுகள் நிலம் ஒதுக்கப்பட்டோரிடமிருந்தும் பெறப்பட்டன. செவனகலவின் வெளியீடு மேம்பட்டமைக்கு பிழியப்பட்ட கரும்பின் அளவு அதிகரித்தமையே ஒரே காரணமாக இருந்ததுடன், இது 1999இனைவிட 49 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. செவனகலவில் தனியார் கரும்புக் கொள்வனவுகள் பிழியப்பட்ட மொத்தக் கரும்பில் 1 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டன.

பிழியப்பட்ட கரும்பின் மொத்த அளவில் 6 சதவீதமான அதிகரிப்புக் காணப்பட்டபோதும், இவ்வாண்டிற்கான மொத்தக் கரும்பு உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு மோசமான சீனி மீளப்பெறல் வீதமே உண்மையான காரணமாகும். செவனகலவில் சீனி மீளப்பெறல் வீதம் 8.6 சதவீதத்திலிருந்து 8.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் பெல்வத்தையின் சீனி மீளப் பெறல் வீதம் 8.8 சதவீதத்திலிருந்து 8.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக பொதுவான வீழ்ச்சி 8.7 சதவீதத்திலிருந்து 8.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையந்தது. இலங்கையில் எய்தப்பெற்ற சீனி மீளப்பெறல் வீதங்கள் இந்தியா போன்ற மற்றைய சீனி உற்பத்தி செய்யும் நாடுகளின் மீளப் பெறல் வீதங்களைவிட மிகக் குறைவாக இருந்ததுடன் அந்நாடுகளின் சீனி மீளப்பெறல் வீதம் 10 சதவீதத்திற்கும் கூடுதலாக இருந்தது. இலங்கையின் நிலைமைகளில் பெருமளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கோ 775 வகைக் கரும்பு மிக உயர்ந்த சீனி விளைச்சலைத் தரரதபோதும் பயிரிட வேளாண்மையாளர் விரும்பினர். கரும்பு நிறை அடிப்படையிலேயே கொள்வனவு செய்யப்படுவதனால் உயர்ந்த சீனி விளைச்சலைத்தரும் வகைக்குப பதிலாக வேளாண்மையாளர் உயர்ந்த கரும்பு விளைச்சலைத்தரும் வகைகளைப் பயிரிட விரும்பினர்.

1999இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டபோதும் பெல்வத்தையில் கரும்பின் சராசரி விளைச்சல் எக்டேயரொன்றிற்கு 52மெற்றிக் தொன்னிற்கு 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1999இல் 3 மாத வீழ்ச்சியைப் பதிவு செய்த செவனகலவின் சராசரி விளைச்சல் எக்டேயரொன்றிற்கு 83 மெற்றிக் தொன்னுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கையினால் எய்தப்பட்ட சராசரி சீனி விளைச்சலும் இப்பிராந்தியத்துள் மற்றைய நாடுகளினால் எய்தப்பெற்ற மட்டங்களைவிட குறைவாகவே காணப்பட்டது. இலங்கையின் விளைச்சல் எக்டேயரொன்றிற்கு ஏறத்தாழ 4.7 மெற்றிக் தொன்களாகக் காணப்பட்டவேளையில் இந்தியாவின் விளைச்சல் எக்டேயரொன்றிற்கு 7.2 மெற்றிக் தொன்களாகக் காணப்பட்டது.

### 3.5 மீன் மற்றும் கால்நடை

கடற்றொழில் மற்றும் நீரியல் மூலவள அமைச்சினாலும் தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவரினாலும் மதிப்பிடப்பட்டவாறு மீன் உற்பத்தி 1999இனைவிட 4.9 சதவீதத்தினால் அதிகரித்து 322,737 மெற்றிக் தொன்களாக விளங்கின. கடற்றொழில் நீரியல் மூலவள அமைச்சின் மதிப்பீடுகளின்படி, கரையோர மீன்பிடி மற்றும் மீன் பண்ணைகளின் உற்பத்தி 219,980 மெற்றிக் தொன்களுக்கு 8 சதவீதத்தினால அதிகரித்தது. மாறாக தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரின் மதிப்பீடுகளின்படி ஆழ்கடல் மற்றும் கரைகடந்த மீன்

உற்பத்தி 102,757 மெற்றிக் தொன்களுக்கு 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

கரையோரம், ஆழ்கடல் மற்றும் கரைகடந்த துணைத்துறைகளை கடல் மீன்பிடித்துறை உள்ளடக்கியிருந்தது. மொத்த மீன் உற்பத்தியில் இத்துறை 89 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 286,000 மெற்றிக் தொன்களுக்கு உயர்ந்து 3.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வதிகரிப்பு முழுவதும் 6.6 சதவீதத்தினால் அதிகரித்த கரையோரத் துறையிலிருந்து கிடைத்த வேளையில் ஆழ்கடல் மற்றும் கரைகடந்த துறைகளின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

மொத்த மீன் உற்பத்தியில் 11 சதவீதத்திற்கு வகைகூறும் உள்நாட்டு மீன்பிடி மற்றும் பண்ணை மீன் வளர்ப்பு 1999 உடன் ஒப்பிடுகையில் 16.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு, உள்நாட்டு நீர்த் தேக்கங்களுக்கு அதிகரித்தளவில் மீன் குஞ்சுகள் விடப்பட்டமையும் அதேபோன்று 1999இல் இறால் கைத்தொழிலைப் பாதித்த வெள்ளைப்புள்ளி மற்றும் மஞ்சள்தலை நோய் என்பனவற்றிலிருந்து மீட்சியடைந்த பண்ணைத்துறையின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புமே காரணங்களாகும்.

அமைச்சு மீன் பண்ணை அபிவிருத்திக்காக 180இற்கு மேற்பட்ட கிராமியக் குளங்களை அடையாளம் கண்டுள்ளது. இவ்வாண்டில் 60 குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. மீன் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 2000 ஆம் ஆண்டில் 5 மில்லியனுக்கு மேற்பட்ட மீன் குஞ்சுக்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாண்டில் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் உள்நாட்டு மற்றும் மீன் பண்ணைத்துறைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட உதவுதொகைகள் ரூ.15 மில்லியனுக்கு 15 சதவீதத்தினால் அதிகரித்தன.

கடல் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கான உயர்ந்த உள்ளார்ந்த வளத்தினை நாடு கொண்டிருந்தபோதும், வடக்கிலும் கிழக்கிலுமுள்ள கரையோர ஒடுங்கிய பகுதிகளைக் கொண்ட பாரிய பிரதேசத்திலுள்ள தற்போதைய நிலைமை மீன்பிடிக்கு உகந்ததாக இல்லை. தீர்க்கப்படாத பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாக அப்பிரதேசங்களின் மீன்பிடி நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கடல்மீன்பிடியினை அதிகரிப்பதற்கு பலநாட் படகுகளை பயன்படுத்துவதன் மூலம் ஆழ்கடல் மீன்பிடியை அரசாங்கம் ஊக்குவிக்கின்றது. இவ்வாண்டில், உற்பத்தியாளர் உதவு தொகைத் திட்டத்தின் கீழ் 59 பலநாட் படகுகள் வழங்கப்பட்டன. தற்பொழுது தொழிற்பாட்டிலுள்ள பலநாட் படகுகளின் மொத்தத் தொகுதி 1400 ஆகும். பலநாள் படகுகளுக்குப் புறம்பாக, 369 மரபு ரீதியான சிறு கப்பல்களும் 539 மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணத் தொகுதிகளும் உதவுக் கொடுப்பனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி அளவும் பெறுமதியும் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. ஏற்றுமதி செய்யப்பட்ட உடன்மீன், உப்பிடப்பட்ட மீன் மற்றும் நண்டு இறால் வகைகளின் மொத்த அளவு இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக ஏறத்தாழ 18,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. யப்பானிலிருந்து பறவைமீன், மஞ்சள் செட்டை கெலவல்ல என்பனவற்றிற்கு பாரிய கேள்வி காணப்பட்டமையானது கெலவல்லவின் உள்ளூர் விலைகளில் அதிகரிப்பினைத் தோற்றுவித்தது.

தகரத்திலடைக்கப்பட்ட மீன் உள்ளிட்ட மற்றும் உலர்த்திய ஏனைய மீன்வகை இரண்டினையும் உள்ளடக்கிய மீன் இறக்குமதி இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது. கருவாட்டு இறக்குமதி 13 சதவீதத்தினால் 54,868 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்த வேளையில் மற்றைய மீன் இறக்குமதிகள் 25,655 மெற்றிக் தொன்களுக்கு 32 சதவீதத்தினால் அதிகரித்தன.

மீன்பிடித்துறையில் இனங்காணப்பட்ட பிரச்சனைகளிலொன்று மீன் பிடிக்கப்பட்டமையின் பின்னர் மோசமான கையாளலின் காரணமாகப் பழுதடைந்து அதன் மூலம் ஏற்படும் பெருமளவு இழப்புக்களாகும். மோசமான பதனிடலின் காரணமாக பிடிக்கப்பட்ட மீனின் ஏறத்தாழ 25 சதவீதம் விரயமாகுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக கடற்றொழில் நீரியல் மூலவள அபிவிருத்தி அமைச்சு சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவரின் உதவியுடன் பலநாட் படகுகளை பயன்படுத்தும் மீனவர்களுக்காக மீன்களைக் கையாளல் மற்றும் பதனிடல் பற்றிய நவீன முறைகள் மீதான முன்னோடிச் செயற்றிட்டமொன்றினை பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் ஒழுங்கு செய்தது.

**அட்டவணை 3.8**
**மீன் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள் '000

| துணைத்துறை | 1998 | 1999(அ) | 2000(ஆ) |
|---|---|---|---|
| கடல் (இ) | 240 | 276 | 286 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 30 | 31 | 37 |
| மொத்தம் | 270 | 307 | 323 |

மூலங்கள்: கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு. தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர்.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறைகள்.

நன்னீர் அலங்கார மீன்களை இனப்பெருக்கம் செய்வதும் இவற்றை ஏற்றுமதி செய்வதும் பிரபல்யமடைந்து வருகின்றது. இவ்வாண்டில் அலங்கார மீன்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ.593 மில்லியனுக்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தது. அலங்கார மீனுக்கான மிக உயர்ந்த கேள்வி யப்பான் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் காணப்பட்டது. ஏற்றுமதிச் சந்தையில் இலங்கையின் பங்கு மிகச் சிறிதாக இருப்பதுடன் இக் கைத்தொழிலை விரிவாக்குவதற்கு மிகப் பெரிய உள்ளார்ந்த வளமும் காணப்படுகிறது.

## கால்நடை

2000ஆம் ஆண்டில் கால்நடைத்துறை முக்கியமாக பாற்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை உற்பத்திகளை உள்ளடக்கி மிதமான வளர்ச்சியைக் காட்டியது. தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி, பசுப்பால் மற்றும் எருமைப்பால் உற்பத்திகள் முறையே 263 மில்லியன் இலீட்டர்களுக்கும் 83 மில்லியன் இலீட்டர்களுக்கும் சிறிதளவால் அதிகரித்தன. இவ்வாண்டுக் காலத்தில் உள்நாட்டு முட்டை உற்பத்தி 923 மில்லியன் முட்டைகளுக்கு 3 சதவீதத்தினால் அதிகரித்தது. கோழிப் பண்ணைத்துறை பாற் பண்ணைத் துறையைவிட விரைவாக அபிவிருத்தியடைந்தமைக்கு முக்கிய காரணம் இத்துறையில் அரசின் தலையீடு மிகக் குறைவாகக் காணப்படுவதாக இருக்கலாம். பாற்பண்ணைத்துறையில் இன்னமும் பெரும் பங்கினைக் கொண்டுள்ள அரசு பாரிய அளவு தனியார்துறை முதலீட்டுக்கெதிரான பெரும் தடையாகச் செயற்படுகின்றது.

கடந்த ஒரு சில ஆண்டுகளாக மாட்டிறைச்சி நுகர்வில் படிப்படியான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட நுகர்வோர் நிதி அளவீடுகளின்படி, உணவில் விலங்குப் புரதத்தின் மூலமாக இருந்த மாட்டிறைச்சிக்குப் பதிலாக கோழி இறைச்சியின் நுகர்வு அதிகரித்து வருகின்றது. கவர்ச்சிகரமான விலைகள், இலாபம் மற்றும் ஊக்குவிப்புக்களைக் கவனத்திற் கொண்டு 2000ஆம் ஆண்டில் கோழி இறைச்சி உற்பத்தி 62,700 மெற்றிக் தொன்களுக்கு ஏறத்தாழ 10 சதவீதத்தினால் அதிகரித்தது. பெருந்தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி அமைச்சின்படி முட்டையிடும் கோழி, இறைச்சிக்கான கோழி, என்பனவற்றின் உற்பத்தி 2000ஆம் ஆண்டில் முறையே 11 சதவீதத்தினாலும், 19 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளன. குஞ்சு பொரிக்கும் சாதனங்கள், கோழித்தீன் ஆலைகள், கோழிக்கூடுகள், குஞ்சு வளர்ப்பு மற்றும் தீனிடும் முறைகள் போன்ற சாதனங்களின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட சலுகைகளும் கோழி வளர்ப்புத்துறை அபிவிருத்தியடைய உதவின.

வரையறுக்கப்பட்ட கிரியா மில்க் இன்டஸ்றிஸ் ஒவ் லங்கா பிறைவேட், வரையறுக்கப்பட்ட நெஸ்லே லங்கா, வரையறுக்கப்பட்ட இன்ரனசனல் டெய்றி புறடக்ஸ் மற்றும் ஏனைய பதனிடலாளர்களின் பால் சேகரிப்பு 92.4 மில்லியன் இலீட்டர்களாக விளங்கி 1999உடன் ஒப்பிடுகையில் 15 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. பால் சேகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வரையறுக்கப்பட்ட கிரியா மில்க் இன்டஸ்ரிஸ் லங்கா பிறைவேட்டில் நிலவிய கைத்தொழில் தகராறுகளும் மட்டக்களப்பிலும், வாழைச்சேனையிலும் நிலவிய மோசமான பாதுகாப்பு நிலைமைகளுமே காரணங்களாகும். 2000ஆம் ஆண்டு செத்தெம்பரிலிருந்து கிரியா மில்க் இன்டஸ்றீசின் பால் கொள்வனவு விலைகள் மேல் நோக்கி உயர்த்தப்பட்டமையின் காரணமாக பால் வழங்குனர்கள் நன்மைகளைப் பெற்றனர். பாலின் கொள்வனவு விலை 6 சதவீதத்தினால் இலீற்றர் ஒன்று ரூ.14.77 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனினும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின்படி, 2000ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர்களினால் பெறப்பட்ட விலைகள் இலீற்றர் ஒன்றிற்கு ரூ.13.56இல் மாற்றமின்றியிருந்தது. 2000ஆம் ஆண்டு பால் உற்பத்தியின் சராசரிச் செலவு இலிற்றர் ஒன்றிற்கு ரூ.5.84 இற்கு 1 சதவீதத்தினால் அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட கிரியா மில்க் இன்டஸ்ரீஸ் லங்கா பிறைவேட்டினை முகாமைப்படுத்தும் இந்திய தேசிய பாற்பண்ணை அபிவிருத்திச்சபை 2000ஆம் ஆண்டு ஏப்பறிலில் கம்பனியைவிட்டு விலக வேண்டியிருந்ததுடன் அதன் பின்னர் முகாமைத்துவம் இலங்கை அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. 2000ஆம் ஆண்டில் பால் மற்றும் பால் உற்பத்திகளின் இறக்குமதிகள் 6 சதவீதத்தினால் 61,194 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து ரூ.8,945 மில்லியன் பெறுமதியினைக் கொண்டிருந்தன.

வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கொள்கைக்கான குழு நாட்டின் பாற்பண்ணை அபிவிருத்திக்கான முக்கிய தடைகளாக மேச்சல் நிலம் மற்றும் விலங்குணவு போதுமானளவு இல்லாமை, பால் சந்தைப்படுத்தல், வளர்ப்பு, விலங்கு மருத்துவப் பணிகள், மற்றும் சரியாக நிருமாணிக்கப்பட்ட கால்நடை மருத்துவங்கள் போதாமை போன்றவற்றை இனங்கண்டுள்ளது. விலங்கு மருத்துவப் பணிகளையும் விரிவாக்கல் பணிகளையும் முன்னேற்றுவதற்காக இவ்வாண்டில் 65 புதிய விலங்கு மருத்துவ அலுவலர்கள் சேர்க்கப்பட்டனர். மலைநாட்டுப் பெருந்தோட்டங்களில் பாற் பண்ணைத்துறையை மீளவலுப்படுத்தும் நோக்குடன் 2000ஆம் ஆண்டில் சிறப்புப் பாற்பண்ணைச் செயற்றிட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. செயற்றிட்டக் காலம் 3 ஆண்டுகளாக இருந்ததுடன் முதலில் ஐந்து பெருந்தோட்டங்களில் முன்னோடி அடிப்படையில்


நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இச் செயற்றிட்டத்தின் குறிக்கோள் யாதெனில் தற்போதுள்ள கால்நடைப் பண்ணைகளின் முகாமைத்துவத்தை முன்னேற்றுவதன் மூலமும் பெருந்தோட்டங்களில் பாற்பண்ணைக் கால்நடைகளின் தொகையை அதிகரிப்பதன் மூலமும் பெருந்தோட்டங்களின் பால் உற்பத்தியை அதிகரிப்பதேயாகும். ஏறத்தாழ 600 பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்கள் இச் செயற்றிட்டத்திலிருந்து நேரடியாக நன்மைகளைப் பெறுவர்.

## 3.6 உள்ளீடுகள்

### வளமாக்கி

2000ஆம்ஆண்டில் வளமாக்கியின் பயன்பாடு 589,000 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வீழ்ச்சி முக்கியமாக நெல் மற்றும் தெங்கு என்பனவற்றிற்கான வளமாக்கிப் பாவனையில் காணப்பட்டது. பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட குறைப்பினதும் அதேபோன்று எக்டேயரொன்றிற்கு பயன்படுத்தப்பட்ட அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியினதும் விளைவாக 2000ஆம் ஆண்டு சிறுபோகத்தில் நெல்லின் வளமாக்கிப் பாவனை வீழ்ச்சியடைந்தது. நெல்லிற்கான வளமாக்கிப் பயன்பாடு, பயன்படுத்தப்பட்ட வளமாக்கியில் பெரும் பங்கிற்கு வகைகூறியது. 2000ஆம் ஆண்டு பெரும்போகத்தின் பின்னர் நிலவிய தாழ்ந்த நெல் விலைகளின் காரணமாக வளமாக்கிப் பயன்பாடு வீழ்ச்சியடைந்தது. 1999இல் 56 சதவீதமாகக் காணப்பட்டநெல்லிற்கான வளமாக்கி வழங்கலின் பங்கு 2000ஆம் ஆண்டில் 44 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தெங்கு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக தெங்குத் துறைக்கான வளமாக்கி வழங்கல்களும் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஏனைய களப்பயிர்கள் மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் வீழ்ச்சியைப் பதிவு செய்தன. எனினும் இவ்வாண்டில் நிலவிய தேயிலைக்கான கவர்ச்சிகரமான விலைகள் தேயிலைக்கான வளமாக்கியின் பாவனையை ஊக்குவித்து 21 சதவீதமான அதிகரிப்பிற்கு வழிவகுத்தது.

**வரைபடம் 3.6**
**வளமாக்கிப் பயன்பாடு - முக்கிய பயிர்வகைகள்**
**( 1999=100 )**




**அட்டவணை 3.9**
**பயிர்களின் படியான வளமாக்கிப் பயன்பாடு**

'000 மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1998 | 1999 (அ) | 2000 (ஆ) |
|---|---|---|---|
| நெல் | 252 | 321 | 258 |
| தேயிலை | 182 | 164 | 198 |
| இறப்பர் | 16 | 10 | 13 |
| தெங்கு | 38 | 39 | 37 |
| ஏனைய களப் பயிர்கள் | 44 | 43 | 41 |
| ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் | 11 | 10 | 8 |
| ஏனையவை | 19 | 30 | 34 |
| மொத்தம் | 561 | 617 | 589 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது. மூலம்: தேசிய வளமாக்கிச் செயலகம்.
(ஆ) தற்காலிகமானவை.

1997இலிருந்து யூரியாவிற்கு மட்டுப்படுத்தப் பட்டிருந்த வளமாக்கி உதவுதொகை இவ்வாண்டிலும் தொடர்ந்து காணப்பட்டது. யூரியா 50 கி.கிறாம் பையொன்று ரூ.350 இற்கு வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்டது. உலக சந்தையில் வளமாக்கி விலைகளில் ஏற்பட்ட விலை தளம்பல்கள் மற்றும் ரூபாவின் பெறுமதி தேய்மானம் என்பனவற்றின் விளைவாக வளமாக்கி உதவு தொகை வீதம் இவ்வாண்டில் பலதடவைகள் திருத்தியமைக்கப்பட்டன. அதனால் வளமாக்கி உதவிக் கொடுப்பனவுக்கான மொத்தச் செலவினம் ஆரம்ப வரவு செலவுத்திட்ட ஒதுக்கான ரூ.1500 மில்லியனை விஞ்சி 2000ஆம் ஆண்டில் ரூ.1,733 மில்லியனாகக் காணப்பட்டது.

### விதைகள்

தரமான விதைகளை உற்பத்தி செய்வதிலும் விற்பனை செய்வதிலும் தனியார்துறையை தீவிரமாகப் பங்கேற்கச் செய்யும் பொருட்டு வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் இவ்வாண்டில் மேலும் வலுவாக்கப்பட்டன. இது தொடர்பாக வேளாண்மைத் திணைக்களத்தின் பெல்வெகற விதைப் பண்ணையின் ஒருபகுதியை அரசு தனியார்துறை விதை உற்பத்தி நிறுவனத்திற்கு கையளித்தது. இந் நிறுவனம் இந்த நிலத்தை உயர் தொழில்நுட்ப வேளாண்மைக்கான விதை மற்றும் நவீன கருவிகளின் விற்பனை மற்றும் செய்முறை விளக்கமளிக்கும் நிலையமாக அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்களை ஏற்கனவே தொடங்கிவிட்டது.

அரசதுறை மற்றும் தனியார்துறை விதைப் பண்ணைகளுக்குப் புறம்பாக, மாகாணசபைகள், மகாவலி அதிகாரசபை மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவும் விதை நெல் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. கடந்த பத்தாண்டு காலத்தில் முன்னெப் பொழுதுமில்லாத மிக உயர்ந்த விதை நெல் உற்பத்தி

(13,000 மெ.தொன்) 2000ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டது. மொத்த விதை நெல் உற்பத்தியில் தனியார்துறை 45 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் கூட்டுறவுத்துறையும் அரசதுறையும் முறையே 34 சதவீதத்திற்கும் 21 சதவீதத்திற்கும் வகைகூறின.

தனியார்துறையிலுள்ள சில பாரிய அளவில் விதை நெல்லை உற்பத்தி செய்பவர்கள் அரச பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதை நெல்லிற்கு உற்பத்தி செலவிலும் பார்க்க குறைவாக விலையிடப்படுகிறது எனக் கருதுகிறார்கள். அரசதுறையின் விதை நெல் விலை 1997இன் பின்னர் திருத்தப்படவில்லை. தனியார் விதை உற்பத்தியாளர்கள் விதை நெல்லின் விலை செயற்கையாக குறைந்த விலையில் நிர்ணயிக்கப் படுவதாகக் குற்றம் சாட்டுவதானது விதைக் கைத்தொழிலின் அபிவிருத்தியைத் தடைசெய்வதாக இருக்கின்றது.

## வேளாண்மை இரசாயனம்

கிருமித்தடுப்பு பதிவாளரின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, கிருமிநாசினிகள், பங்கசுக்கள், மற்றும் களைக் கொல்லிகள் என்பனவற்றை உள்ளடக்கிய கிருமித் தடுப்புப் பொருட்களின் பயன்பாடு இவ்வாண்டில் 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சார்பு ரீதியில் கிருமிநாசினிகளின் பயன்பாட்டில் 28 சதவீதம் கொண்ட உயர் வீழ்ச்சி காணப்பட்டது.

வேளாண்மைத் திணைக்களம் கிருமி நாசினிகள் பயன்படுத்துவதனை குறைப்பதன் மூலம் பயிர்ச் செய்கைச் செலவினையும் குறைக்கும் நோக்குடன் ஒருங்கிணைக்கப்பட்ட கிருமித்தடுப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டமொன்றினை தொடர்ந்தும் மேற்கொண்டது. இப்பயிர்ச் செய்கையாண்டில் 46,000 எக்டேயர்களை உள்ளடக்கிய "யாயா செய்முறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின்"கீழ் ஏறத்தாழ 54,000 வேளாண்மையாளர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட கிருமித்தடுப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்ட முறையைப் பின்பற்றினர்.

## 3.7 காடாக்கல்

வனபரிபாலனத் திணைக்களமானது காடுகளைப் பேணுதல் மற்றும் சூழல் முகாமைத்துவத்தை சிறப்பாக வலியுறுத்தும் விதத்தில், காடாக்கல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டுக் கொடை முகவர்களின் உதவியுடன் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. காடாக்கல்துறை முதன்மைத் திட்டத்துடன் ஒத்துச் செல்லும் விதத்தில், காட்டு மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டம் 2000ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச் செயற்றிட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியிட்டதுடன் 2000ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின்கீழ் ரூ.117 மில்லியன் வழங்கப்பட்டது. அரச காடுகளை அளவீடு செய்தல் மற்றும் எல்லைகளை வரைதல், காட்டுப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், காட்டுத் திணைக்கள கட்டடவியல் ஆலோசனை வேலைகளின் மீளமைப்பினைத் தொடங்கியமை என்பன இச் செயற்றிட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும்.

ஆசிய அபிவிருத்தி பங்கேற்பு காடாக்கல் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக 2000ஆம் ஆண்டில் ரூ.60 மில்லியனை வழங்கியதுடன் ரூ.33.4 மில்லியன் மேல்நீரோட்ட முகாமைத்துவ செயற்றிட்டத்திற்காக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தாங்கிருப்பு வலயங்களை அழகுபடுத்தல், தாங்கிருப்பு வலய மரநடுகைகளைப் பேணல், வீட்டு மர வளர்ப்பினை அபிவிருத்தி செய்தல், அருவி பாயுமிடங்களில் மரம் நடுதல், பொது இடங்களிலும் தனிப்பட்ட நிலங்களிலும் மரம் நடுதல் மற்றும் மரப் பண்ணைகளையும், நாற்று மேடை நிகழ்ச்சித் திட்டங்களையும் பேணுதல் போன்ற

**அட்டவணை 3.10**
**காடாக்கல் துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விபடம் | அலகு | 1998 | 1999 (அ) | 2000 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. மொத்தக் காட்டுத் தொகுதி உள்ளடக்கம் (இ) | '000 எக்டேயர்கள் | 2,119 | 2,119 | 2,119 |
| மூடப்பட்ட காடுகள் (ஈ) | '000 எக்டேயர்கள் | 1,583 | 1,583 | 1,583 |
| பரந்த காடுகள் | '000 எக்டேயர்கள் | 464 | 464 | 464 |
| சதுப்பு நிலக் காடுகள் | '000 எக்டேயர்கள் | 8,687 | 8,687 | 8,687 |
| 2. காடு அழிக்கப்பட்ட நிலப்பரப்பு (உ) | எக்டேயர்கள் | - | - | 244 |
| 3. மீள் காடாக்கப்பட்ட பரப்பு (ஊ) | எக்டேயர்கள் | 571 | 556 | 828 |
| 4. பதிவுசெய்யப்பட்ட காடு சார்ந்த குற்றங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 4,193 | 3,928 | 4,626 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் அளவு | கன மீற்றர்கள் | 2,589 | 2,912 | 5,662 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் பெறுமதி | மில். ரூபா | 29.7 | 28.7 | 56.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) கிட்டத்தட்ட 72,350 எக்டேயர்களைக் கொண்ட வளம்மிக்க வளர்ப்பு காடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
(ஈ) சதுப்பு நிலக் காடுகள் உட்பட.
(உ) மதிப்பீடுகள்.
(ஊ) பங்கேற்பு காடாக்கல் செயற்றிட்டத்தில் உள்ள பரப்புக்கள் நீங்காலாக.

மூலம்: காட்டுத் திணைக்களம்.

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டில், உலக வங்கியினால் நிதியிடப்பட்ட மருத்துவ மூலிகை செயற்றிட்டத்தின் கீழ், ரூ.2 மில்லியன் செலவிடப்பட்டது. இச் செயற்றிட்டத்தின்கீழ் மாத்தளை, றிட்டிகல, பலாங்கொட மற்றும் பிபிலை ஆகிய இடங்களில் மருத்துவ மூலிகைத் தோட்டங்களை நிறுவுதல் மற்றும் பேணுதல், தோட்டங்களை அழகூட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. 2000ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கருவிகளின் கொள்வனவிற்காகவும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்குமாக உலகளாவிய சூழல் வசதி நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதியிட்டது.

காட்டு விபரங்கள் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளின் கீழ், 1265 எக்டேயர் காட்டு மரவளர்ப்பு அளவீடு செய்யப்பட்டதுடன் 5,380 எக்டேயர் பைன் மர வளர்ப்புத் தொடர்பாக ஐந்து பிசின் எடுக்கின்ற குத்தகை உடன்படிக்கைகளும் 2000ஆம் ஆண்டில் தொடர்ந்தன. மேலும் 5,900 எக்டேயர் காடு வளர்ப்புத் தொடர்பாக மரங்களின் அடர்த்தியைக் குறைத்தல், கத்தரித்தல், களைபிடுங்குதல், வளமாக்கிப் பாவனை, பங்கசுகள் மற்றும் பூச்சி நாசினிகளைப் பயன்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கிய காட்டு வளர்ப்புக் கலையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. காட்டு விரிவாக்கத்தின் கீழ், 2000ஆம் ஆண்டில் 2 மில்லியன் நாற்றுக்கள் மரப்பயிரிடல் நிகழ்ச்சித் திட்டத்திற்காகப் பெறப்பட்டதுடன் 6,700 கி.கிறாம் விதைகள் நாற்று மேடை நிகழ்ச்சித் திட்டத்திற்காக சேகரிக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டில் வனபரிபாலனத் திணைக்களம் மரங்களைக் கொண்டு செல்லுதலுடன் தொடர்பான ஒழுங்கு விதிகளின் நடைமுறைப் படுத்தலைத் தொடர்ந்தும் கண்காணித்ததுடன் சட்டவிரோத காடழிப்பினைக் கட்டுப்படுத்துவதற்கான கண்காணிப்பு பரிசோதனைகளையும் மேற்கொண்டது. மர விற்பனை நிலையங்களை பதிவு செய்தல் தொடர்பான புதிய ஒழுங்கு விதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் 2000ஆம் ஆண்டில் நான்கு அரச வர்த்தமானி அறிவித்தல்களும் வெளியிடப்பட்டன. சட்டவிரோதமாக தறிக்கப்பட்ட மரத்தின் அளவு 2,912 கனமீற்றர்களிலிருந்து 5,662 கனமீற்றர்களுக்கு கணிசமாக அதிகரித்ததுடன் பதிவு செய்யப்பட்ட காட்டு வழக்குகளின் எண்ணிக்கை 1999இன் 3,928 இலிருந்து 2000ஆம் ஆண்டில் 4,626இற்கு அதிகரித்தமையானது, மரம் தறித்தல் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றது.

மரத்தின் முக்கிய வழங்குனரான அரச மரக் கூட்டுத்தாபனம் 2000ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவு செய்தது. 2000ஆம் ஆண்டுப் பகுதியில் கூட்டுத்தாபனத்தின் மரக் குற்றிகள், அரியப்பட்ட மரம் மற்றும் விறகு என்பனவற்றின் மொத்த வெளியீடு 277,695 கனமீற்றர்களாக அமைந்து 1999 உடன் ஒப்பிடுகையில் 40 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தமைக்கு அரச மற்றும் தனியார் காணி நிலையங்கள் இரண்டிலும் மரம் தறிக்கும் நடவடிக்கைகள் அதிகரித்தமையே காரணமாகும்.